# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை





அறிவக நிலையம்,
செய்தித்தாள்; நூல், தாம்பூல விற்பனை
எண். 5, மந்தவெளி சந்து, மயிலை.
சு. வெ. தங்கசாமி

# கல்லும் மண்ணும்

நகைச்சுவை நுட்பமானதொரு கலை. மனிதனுக்கு மட்டுமே தெரிந்த, கைவந்த கலை. மற்ற விலங்குகளுக்கு அந்த வித்தை தெரியாது. மனிதன் சிரித்தால்தான் அழகாக இருக்கும்; விலங்குகள் சிரிப்பது இல்லை. நகை—நகைப்பு—சிரிப்பு மனிதனுக்கு அழகு தருவதோடு நன்மையும் செய்கிறது. உள்ளம் உடையும் அளவுள்ள துன்பமாயினும் வாய்விட்டுச் சிரித்தால் அந்தத் துன்பம் மறைந்துவிடும் என்று வள்ளுவரும்கூறுகின்ருர். தமிழ்ப் புலவர்கள் பலர் நகைச்சுவையை நயம்படக் கையாண்டு வெற்றிகண்டுள்ளனர். தனிப்பாடல் தொகுதியில் பல பாடல்கள் நகைச்சுவையை ஆதாரமாகக்கொண்டவையே.

இராமச்சந்திரக் கவிராயர் என்பவர் ஒரு புலவர்; வறுமையிலே வாடிக்கிடந்தார். வறுமையில் கிடந்தபோதும், தம் உள்ளத்தில் வாட்டம்கொள்ளவில்லை. உற்சாகம் மிகக்கொண்டிருந்தார். கவிதையாற்றலை இழக்கவில்லை. பாடிய கவிகளில் நகைச்சுவையை மறக்கவில்லை. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற தன் முன்னோரின் மூதுரையை நினைவில்கொண்டு தம் பாடல்களில் நகைச்சுவையைக் கலந்தளித்துள்ளார்.

புலவர் அனுபவித்த வறுமையை அளவிட்டுச் சொல்லமுடியாது. பசி வயிற்றிலே படுத்தும்போது, எதைத் தின்பது என்று அறியாது தவிக்கின்ருர். நம்முடைய நாட்களிலும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியவர்கள், நாட்டிலே பஞ்சம் உச்சநிலையில் இருந்தபோது கண்டதைத் தின்றனர் என்ற செய்திகளை அறிந்தோம் அல்லவா? கற்ருழையைக் கூட விடவில்லையே. அப்படிப்பட்ட கொடிய வறுமையில் !சிக்கிடும் புலவர் எதைத் தின்பது என்று பார்க்கின்ருர். தின்னத்தக்கது எதுவும் காணவில்லை. அரிசி, பருப்பு, காய், கனி எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லையாவது, கண்ணிலேயே படவில்லை. என்ன செய்வார் பாவம் புலவர். சுற்றிச்சுற்றிப் பார்த்தாலும் அவர் கண்ணில், கல்லும் மண்ணும்தான் தெரிகின்றன. உண்ணும் பொருள் எதுவும் தெரியவில்லை. வயிறோ பசியால் வாடுகிறது. புலவருடையபசிக்கொடுமையையும் மீறிக்கொண்டு பாட்டு வருகிறது.

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்
தான் குடிக்கத்தான் கற்பித்தானு?"

கல்லையும் மண்ணையும்கூட, காய்ச்சிக் குடிப்பதற்கு அவர் தாயர்தான். ஆனுல் தன்னைப் படைத்தவன், அதைக் கற்பிக்கவில்லையே என்ற ஏக்கம்தான், என்செய்வார் பாவம்! கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிப்பதற்குக் கற்பிக்கவில்லை என்ருல், வாழ்வதற்கு வசதி இருக்க வேண்டும் அல்லவா? அதுவும் இல்லையே என்று பெருமூச்சு விடுகின்ருர்.

"இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்
குத்தான் கொடுத்துக்தான் இரட்சித்தானு?'

உலகத்தை இயற்றியவர்; மக்களைப்படைத்தவர், காக்கக் கடமைப்பட்டவர் கடவுள் என்ற கருத்திருந்த காலத்திருந்த புலவர் அவர். ஆகவே, தனக்குச் செல்வம் தந்து ஆதரித்திருக்கவேண்டியது கடவுளின் கடமை என்பதை நினைவுபடுத்திப் பாடுகின்ருர். "எனக்குப் பொன்னைப் பொருளையும் கொடுக்க இல்லை; கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிப்பதற்கும் கற்பிக்கவில்லை. நான் என்ன செய்வேன்?" என்று உள்ளம் மருகுகின்ருர் அவர்.

"எங்கும் பல்லைந்தான் திறக்கந்தான்
பண்ணினுனே"

என்று நொந்துகொள்ளுகின்ருர். தீராத கொடுமையில் கிடந்து நோகும் நிலையிலும் புலவருடைய பாடலில் வரும் நயத்தைக்கண்டு வியக்கின்ருேம்.

இந்தப் புலவர் வெற்றிலைபோடும் பழக்கம் உடையவர்போலும்! அவரிடம் ஒரு பாக்கு வெட்டி இருந்தது. அது ஒருநாள் காணுமல்போகிறது. பாக்கு வெட்டியைக் காணுேமே என்று பரிதவிக்கும் புலவர் எங்கெங்கோ தேடுகின்ருர். ஆனுல் அது கிடைக்கவில்லை. பரிதவிப்பு பாட்டாக வெளிப்படுகிறது! பாக்கு வெட்டி காணுமற்போனது ஒரு பாட்டு பிறக்க வழி செய்கிறது. அந்தப் பாடலாலும் புலவரின் இரங்கத்தக்க நிலைதான் புலப்படுகிறது.

விறகுதறிக்கக், கறிநறுக்க, வெண்சோற்று
உப்புக்கு அடகுவைக்க,

பிறகு, பிளவு கிடைத்த தென்ருல்
நாலாருகப் பினந்து கொள்ளப்

பறகு பறகு என்றே சொறியப்
பதமாய் இருந்த பாக்கு வெட்டி.

இறகு முளைத்துப் போவதுண்டோ?
எடுத்தீராயிற் கொடுப்பீரே!

பாக்குவெட்டியின் பயனைப் பார்த்தீர்களா? விறகு தறிக்க—கறிநறுக்க—அடகுவைக்க, பாக்கு பிளக்க, பறகு பறகு என்று சொறிந்து

கொள்ள — இத்தனைக்குப் பயன் பட்டதாம் அந்தப் பாக்கு வெட்டி. அதையும் அடகுவைத்துப் பொருள் பெறவேண்டிய அல்லல் இருந்திருக்கிறது அவருக்கு. பாக்கு வெட்டிக்கு எத்தனை பொருள் தருவார்கள்? சிறிதேதான் கிடைக்குமே என்கிறீர்களா? அதுவே அப்போது அவருக்குப்போதும். சோற்று உப்புக்குத்தானே பொருள்வேண்டும்? உப்பு வாங்கும் அளவுக்குக்கூடவா, பாக்கு வெட்டியை ஈடாக வைத்துக் கொண்டு பணம் தரமாட்டார்கள்? இத்தனை வேலைகளுக்குப் பயன் பட்ட அந்தப் பாக்குவெட்டி காணவில்லை என்றால் எரிச்சல் வராதா, "இங்கேதானே வைத்தேன். காணேமே — நீயும் எடுக்கவில்லை என்றால் — இறக்கை முளைத்துப் பறந்துவிட்டதா?" என்று நாமும் சில நேரங்களில் கேட்கின்றோம். புலவரும் அதேபோல எரிச்சல் மிகுந்து கேட்கின்றார். "இறகுமுளைத்துப் போவது உண்டோ?" இல்லை என்பது அவருக்குத் தெரியும். அதனால் அடுத்துப் பணிவான வேண்டுகோளும் பிறக்கிறது. "எடுத்தீர் ஆயின் கொடுப்பீரே" வறுமையில் வாடிய புலவனின் தோழனாய்இருந்த அந்தப் பாக்குவெட்டி காணேம் என்றதும், எரிந்துவிழுந்த புலவர், எவ்வளவு ஏங்குகின்றார் பாருங்கள். நாம் எடுக்கவில்லை என்றாலும் புதிதாக ஒன்று வாங்கிக்கொடுத்துவிடலாம் என்று தோன்றுகின்றது அல்லவா?

இவ்வளவுதானா இவர் அனுபவித்த துன்பம் என்று கேட்கவேண்டாம். துன்பங்கள் எத்தனை உண்டோ அத்தனையையும் ஒரு பட்டியல் போட்டுக் காட்டுகிறார் வேறு பாடலில். பாட்டைப் படிக்கும்போது நமக்குப் பரிதாபமாகக்கூட இருக்கிறது. இத்துணை துன்பங்களா ஒருவனுக்கு வருகின்றன என்று மலைக்கின்றோம். பாட்டைப் பார்க்கலாம்!

ஆஈன, மழைபொழிய, இல்லம் வீழ,
அகத்தடியாள் மெய்நோவ, அடிமை சாவ,
மாஈரம் போகுதென்று விதை கொண்டுஓட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள
சாவோலை கொண்டு ஒருவன் எதிரேசெல்ல
தள்ளவொண்ணு விருந்துவர,
சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க—

எத்துணை துன்பங்கள் அடுக்கடுக்காக வருகின்றன பார்த்தீர்களா? பாட்டு இதோடு முடியவில்லை—இன்னும் ஒரு பாதி அடி பாக்கியுள்ளது. இத்தனை துன்பத்தில் சிக்கிக்கிடப்பவனிடம் கடைசியாக ஒருவர் வருகின்றார். இவ்வளவு துன்பம்பற்றியும் அவருக்கு ஒரு கவலையும் இல்லை. தன் கருமமே கண்ணாக இருக்கின்றார் அவர். தனக்குச் சேர வேண்டிய பாக்கியைத் தரவேண்டுகின்றார். வட்டிக்குக் கடன் கொடுத்தவரோ? தவணைநாள் தாண்டக் கூடாது என்று வந்துள்ளாரோ? அல்ல-அல்ல-முதல் இல்லா வியாபாரிதான்-'தட்சணை கொடு' என்று கேட்கின்றாராம் குருக்கள்!

கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க, குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே. புலவருடைய நையாண்டியைக் கவனிக்க. அரசர் கடமை-திறைகேட்பதில் பொருள் இருக்கிறது. அவர் கேட்பது, தான் உழுது உண்டதற்கான கடமை. அதைப் பெறுவது அவருடைய உரிமை. ஆனால் குருக்கள் தட்சணைபெற இதுதானா நேரம்? குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே என்பதில் உள்ள 'ஓ' 'ஏ' என்ற இரண்டு எழுத்துக்களும் எவ்வளவு பொருளாழம் உடையன. கருணை சிறிதும் இன்றி நெருக்கடியான நிலையில் உள்ள ஒருவனிடம் சென்று தட்சணைகள்கொடு என்று கேட்கின்றார் ஒருவர். கன்னெஞ்சம் உடையவராக அல்லவா இருக்க வேண்டும் என்று எண்ணும் புலவர் "குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே" என்று ஏங்குகின்றார்.

இவ்வளவு வறுமையில் வாடிய இப்புலவர் தம் வறுமையைப் போக்கிக்கொள்ள முயற்சி செய்தல் ஆகாதோ-என்று நினைக்கின்றீர்கள் அல்லவா? யாராவது ஒரு சீமான் முன்சென்று அவனைப்புகழ்ந்துபாடினால் பொன்னும் பொருளுமாகக் குவித்து அளித்து வறுமையை விரட்டியிருப்பானே என்று நினைப்பு வரும். இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புலவர்கள் அப்படித்தான் பெரும்பாலும் வாழ்ந்தனர். செல்வம் பெற்றோர் பலரும் புலவர்க்கு அளித்துப் புகழும் பெருமையும் பெற்றுள்ளனர். நமக்குத் தோன்றும் இந்த யோசனை அந்தப் புலவர்க்குத் தோன்றாது இருந்திருக்குமா? தோன்றியதினால்தான் அவரும் சில செல்வர்களை நாடிச்சென்று கவிதை புனைந்தார். அவர்களைப் புகழ்ந்து உயர்த்தி, சிறப்பித்துப் பலபடியாகப் பாராட்டிப் பாடினார். ஆனால் பலன்தான் காண இயலவில்லை. பாட்டைக் கேட்டுவிட்டுப் புலவரை ஏன் என்றும் கேட்காது போன செல்வர்களைப்பற்றிப் புலவர் தமது பாட்டு ஒன்றிலே குறிப்பிடுகின்றார்.

வணக்கம் வரும் சிலநேரம்; குமர கண்ட
வலிப்புவரும் சிலநேரம்; வலியச்செய்யக்
கணக்குவரும் சிலநேரம்;
வேட்டைநாய்போல்
கடிக்க வரும் சிலநேரம்;

இப்படிப்பட்ட இயல்புடையவர்களையே புலவர் சந்தித்திருக்கின்றார். இப்படிப்பட்ட கயவர்க்கெல்லாம் இணக்க வரும்படித் தமிழைப்பாடிப் பாடி எத்தனை நாள் திரிந்து உழல்வேன்? — என்றும் கேட்கின்றார். சிலநேரம் வணக்கம் என்கிறார்கள், சில நேரத்தில் வலிப்பு வந்தது போல் நடந்துகொள்ளுகின்றார்கள், சில நேரத்தில் வேறுவேலை இருப்பதுபோல் பாராமுகமாக இருக்கிறார்கள், சிலவேளைகளில்வேட்டை நாய்போல் மேல்விழுந்து கடிக்கவும் வருகின்றார்கள். இப்படிப்பட்டவர்களிடம் பாவம் புலவர் என்னத்தை எதிர்பார்க்க இயலும்? இவர்களுக்கு ஒத்துவரும்படித் தமிழழைப் பாடிப் பாடி எத்தனை நாள் திரிந்து உழல்வார்?

இத்தனை கஞ்சத்தனம் உடையவர்களிடம் அந்தப் புலவர் ஏன் தான் சென்றார் என்று நாம் சலிப்படைகின்றோம். இப்புலவருடைய வாட்டம் போக்காத அவர்களைத் திட்டுவதற்கும், நாம் தயார்தான். ஆனால் புலவரோ அவர்களைத் திட்டுவதற்குப் பதிலாகத் தன்னையே நொந்து கொள்ளுகின்றார். தான் செய்ததுதான் தவறு என்று கருதுகின்றார். அந்தச் செல்வச் சீமான்கள் தனக்கு ஏதும் தராதது தவறு இல்லை—தான் அவர்களைப் பொய்யாகப் புகழ்ந்து பாடியதே தவறு— அதற்கு அவர்கள் தக்க தண்டனையைத் தந்துவிட்டார்கள் என்று ஆறுதல் அடைகின்றார்.

கல்லாத ஒருவனை நான்
கற்றாய் என்றேன்;
காடெறியும் அவனை
நாடாள்வாய் என்றேன்;

(16-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 7—3—65 இதழ் 30

# வருக! வருக!!

மதுரைச் செயல்வீரர் முத்து, திருஞானம், காதர்சா, அக்கினிராசு, முனியாண்டி ஆகிய தியாகச் செம்மல்கள் 442 நாட்களைச் சிறையிலே கழித்துவிட்டு 2—3—1965 காலை விடுதலை பெற்றனர். 1963-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத் திட்டப்படி அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை எரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறை சென்ற அவர்கள் இப்போது வெளியில் வந்துள்ளனர், நீண்ட நாட்கள் சிறையில் வாழ்ந்து வந்துள்ளனர்.

சிறைச்சாலைக்கும் வீட்டுக்கும் மிகுதியான வேறுபாடு கருதாதவர்கள்தாம் கழகத்தினர். இதனை நாடு அறியும். இரும்புக் கம்பிகளுக்குப் பின் இருந்து அடிக்கடிப் பழக்கப்பட்டுப் போனவர்கள்தாம். பலர் வாழச் சிலர் வாடுவது இயற்கை நியதி போலும்! தமிழகத்தில், தமிழரின் நலமோ, தமிழ் மொழியின் வளமோ, குலையும் குறையும் என்ற அச்சம் எழும்போதெல்லாம், அவற்றைக் காக்கத் தங்களையே இழக்கக் கழகத்தவர் தயாராகி விடுவர். ஆபத்து வருகிறது என்பதை அறிந்தால் அதைத் தடுக்க எந்தத் தியாகத்திற்கும் கழகம் தயார். தடைக் கற்கள் உண்டு; எனினும் தடந்தோள் உண்டு; தடந்தோள் துணையால் தடை உடையும்; படை வெல்லும் என்ற நெஞ்சுறுதி கொண்ட வீரர்கள் இங்கு மிகுதி.

கருணையிலா ஆட்சி கடுஞ்சிறையின் வாயிலைத் திறந்து வைத்திடும் போதெல்லாம் 'மாங்குயில்கூவிடும் பூஞ்சோலை' எனச் சிறைச்சாலையை நினைத்திடுவது கழக வீரர்களின் பழக்கமாகிவிட்டது. 'தமக்கென முயலாது பிறர்க்கென வாழும்' பெருநெறியைப் பற்றுவதால்தான் இந்த நெஞ்சுறுதி உண்டாகின்றது. இத்தகைய தியாக சீலர்களின் மத்தியில் மதுரை முத்து அணியினர் தனிச் சிறப்புப் பெறுகின்றவர்களாகின்றனர்.

442 நாட்கள்! ஒரு ஆண்டுக்கு 364 நாட்கள் தாம்! ஆனல் முத்து அணியினரோ 442 நாட்கள் சிறையில் இருந்துவிட்டு வருகின்றனர். அவர்கள் சிறைக்குச் செல்லும்போது 1963! வெளிவருவது 1965-ல்!! இடையில் 1964 வந்து போய்விட்டது. அதை அவர்கள் சிறையில் கழித்துவிட்டார்கள்.

ஏன்?

ஏன் என்பதை நாடு உணர்ந்திருக்கிறது. நாட்டு மொழியைத் தம் தாய்மொழியைக் காக்கக் கடுஞ்சிறை சென்றனர் அவர்கள் என்பதை நாடு அறியும். தாய் மொழியைக் காக்கவேண்டும் என்ற ஆர்வம் இன்று மிகப் பலருக்குத் தோன்றியிருக்கிறது! "வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ, வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ" என்று கூறிய பாரதி பாடலின் மெய்ப்பொருளை உணர்ந்து 'வேறு பாஷை' கற்பதினும், வீட்டு வார்த்தை கற்பது கடமை என்று உணர்ந்துள்ளனர். இது எதனல்?

முத்து போன்றோர்—கழகத்தின் காவலர்கள்—செய்த தியாகத்தினுல்தான் என்பதை எவர் மறுக்கவல்லார்? செய்த தியாகம் வீண்போகவில்லை; பட்ட பாடு பழுதாகவில்லை; விழலுக்கு நீர் பாய்ச்சி மாயவில்லை என்ற திருப்திதானே தியாகம் செய்தவர்களுக்குத் தேவையானது? அத்தகைய திருப்தியைப் பெறத்த நிலையில் சிறை மீண்டு வரும் செம்மல்களை வருக! வருக!! என்று வரவேற்கின்றோம்.

வந்த பிறகு? ஓராண்டுக்கும் மேலான காலம் உங்களுடைய திருமுகங்களை, தீஞ்சொற்களை, அருங் கருத்துக்களை மக்கள் மன்றம் கேட்காமலிருந்துவிட்டது. இனி, கழக வளர்ச்சி குறித்து நீங்கள் உங்கள் கவனம்செலுத்துவீர்கள். நாட்டின் மூலைகளில் உங்களுடைய மூச்சு எதிரொலிக்கும். புதிய பொலிவோடு பிரச்சாரம் தொடரும். தமிழகத்தின் வாழ்வில் திராவிட முன்னேற்றக் கழகம் எவராலும் பிரிக்க இயலாத பிணைப்பைப் பெற்றுவிட்டிருக்கிறது. நாட்டு மக்கள், தங்களுடைய துன்பங்களுக்கு விடுதலை யளிக்கக்கூடிய ஆற்றல் கழகத்திற்கு மட்டுமே உண்டு என்று உணரத் தலைப்பட்டுவிட்டனர். அந்த நிலையைக் கழகம் பெறுவதற்குக் காலமும் கனியவேண்டும்; நமது உழைப்பும் மிகவேண்டும்.

உழைப்பதற்கு வருக! வருக!! எனக் கூறி சிறை மீண்ட செம்மல்களை வரவேற்கின்றோம்.

# கைதி எண் 6342



## தம்பி!

கடவுளை மனிதன் தான் படைத்தான் என்பது சாணக்கியன் வாதம். மனிதனைக் கடவுள் படைத்தார் என்பது குமாரகிரியின் வாதம். கடவுள் யார்? எப்படி இருப்பார்? காட்டமுடியுமா? என்பது சாணக்கியன் கேள்வி. காட்டுகிறேன் காணீர்! என்று சூள்உரைத்துவிட்டு, குமாரகிரி இதோ! ஜோதிமயமான ஆண்டவன்! என்று, அரச அவையின் மையத்தைக் காட்டுகிறார்—அங்கு அடிநுனி காணமுடியாத விதமான ஜோதி. அரசன் உட்பட, அவையினர் அனைவரும் வியப்பிலாழ்கின்றனர். சாணக்கிய வாதம் தோற்றுவிட்டது, சர்வேஸ்வரனைக் காட்டிவிட்டார் குமாரகிரி என்கின்றனர். சாணக்கியன் மட்டும், ஜோதியா! இங்கா? கண்டீர்களா? எல்லோருமா? நான் காணவில்லையே! என்று கூறுகிறான். அவையினர் சாணக்கியன் போக்கை வெறுக்கின்றனர். நாங்கள் அத்தனை பேரும் கண்டது பொய்த்தோற்றமோ என்று கேட்டுக் கோபிக்கின்றனர். தோல்வியால் தலைகவிழ்ந்துகொள்கிறான் சாணக்கியன். அனைவரும் திகைத்துக் கிடக்கும்போது ஆடலழகி எழுந்திருக்கிறாள், குமாரகிரியிடம் வாதிட. கடவுள் என்பதாக ஒரு ஜோதியைக்காட்டினீர். அது உண்மைத் தோற்றமல்ல. உமது மனவலிமை காரணமாக, இங்குள்ள மற்றவர்களின் மனதை உமக்குக் கட்டுப்பட்டதாக்கிக்கொண்டு, ஜோதி தெரிவதாக நம்பும்படிச் செய்தீர். சாணக்கியரின் மனதை உமது மனவலிமை ஏதும் செய்ய இயலவில்லை, அதனால் அவர் கண்ணில் எந்த ஜோதியும் தென்படவில்லை; எனக்குந்தான். உண்மைதானே நான் சொல்வது? என்று கேட்டாள். திடுக்கிட்டுப்போன குமாரகிரி, ஆம் என்று ஒப்புக்கொண்டான். வெற்றி சித்ராவுக்கே என்று அவையினர் ஆர்ப்பரித்தனர். வெற்றிச் சின்னம் சூட்டினர் சித்ராவுக்கு. அந்த ஆடலழகியோ அந்த வெற்றிச் சின்னத்தை யோகி குமாரகிரிக்குச் சூட்டுகிறாள். சீடன் சிவன், காமக்களியாட்டக்காரி என்கிறார்கள், இவளோ கற்றோர் வியக்கும் தத்துவவாதம் புரிகிறாள் என்றெண்ணி வியப்படைகிறான்.

இந்த வெற்றியால் சித்ராவுக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை; புதிய கவலை பிறந்துவிட்டது என்கிறான் பீஜகுப்தா. அவன் கண்டறிந்த கருத்திற்கேற்பவே, யோகி குமாரகிரியிடம், சித்ராவின் மனம் இலயித்துவிடுகிறது. அறிவாற்றல் மிக்கவன், அழகன், அவனே எனக்கு ஏற்றவன் என்று கருதுகிறாள் சித்ரா. துணிந்து ஆசிரமம் சென்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். நீ போக போக்கியத்தில் புரளுபவள் உனக்கு இங்கு இடமில்லை என்று விரட்டுகிறார் யோகி. தங்களுக்குப் பணிவிடை செய்வதிலே இன்பம் காண்பேன், வேறு ஏதும் வேண்டேன், போகபோகங்களைத் துறக்கிறேன், பற்று அற்றவளாகிறேன் என்று கெஞ்சுகிறாள் சித்ரா. நீயா! பற்று அற்ற நிலை பெறப்போகிறாயா! போ! போ! உன்னால் முடியாது! என்று மேலும் விரட்டுகிறார் யோகி. உங்களுக்கு அச்சம். நான் இங்கு இருந்தால், தவம் கலைந்துவிடும் என்ற பயம், அதனால்தான் என்னை விரட்டுகிறீர். முற்றுந் துறந்தவரான உமக்கு ஏற்படலாமா அந்த அச்சம் என்று பேசி மடக்குகிறாள் சித்ரா. சம்மதமளிக்கிறார் யோகி; சித்ரா ஆஸ்ரமத்தில் தங்குகிறாள்.

இது தெரிந்த பீஜகுப்தா மனம் உடைந்த நிலை அடைகிறான். சீடன் திகைக்கிறான்.

பாடலிபுத்ரச் சீமான் ஒருவர் தமது மகளை பீஜகுப்தாவுக்கு மணம் செய்விக்க விரும்புகிறார். அந்தப் பெண் பெயர் யசோதரா. அவளையோ சீடன் சிவன் காதலிக்கிறான். இந்தச் சிக்கல் இங்கு வளருகிறது.

ஆஸ்ரமத்திலேயோ முற்றுந் துறந்தவரின் நிலை குலைகிறது; காமவிகாரம் மேலிடுகிறது. போகபோக்கியத்தில் புரண்டுகிடந்தவளோ, துறவு நிலையை மேற்கொள்கிறாள்—யோகியோ, பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, அவளை அண்டவே ஆரம்பிக்கிறார். ஆடலழகியோ தன்னைத்தீண்ட இடம்தரவில்லை; யோகியாருக்கு ஆசைகளை அடக்கவேண்டிய அவசியம்பற்றிப் போதனை செய்கிறாள்.

ஒருநாள், பீஜகுப்தா யசோதராவை மணம்புரிந்து கொண்டதாக, யோகி கூறி இனி அவனைப்பற்றிய நினைவை விட்டொழி, என்னை ஏற்றுக்கொள், நான் வெறும் மாயையில் மூழ்கிக்கிடந்தேன், இனி உன்னுடன் வாழ்ந்துதான் மெய்ப்பொருளை உணரமுடியும், வா! என்று அழைக்கிறார். யோகியை நாடிவந்தபோதிலும் சித்ராவின் உண்மைக் காதல் குப்தனிடம்,

எனவே குப்தன் யசோதராவைத் திருமணம் செய்து கொண்டதாக யோகி கூறினதும் திடுக்கிட்டாள்; அந்த அதிர்ச்சி அவளை நிலைகுலையச் செய்தது; அந்தச் சந்தர்ப்பத்தை யோகி விருந்தாக்கிக்கொண்டார். யோகம் கலைந்தது, போகி வாழ்க்கையைத் துவக்கினார் குமாரகிரி.

இங்கே, யசோதரை—சிவன் காதல்விஷயம், பீஜ குப்தனுக்குத் தெரிகிறது. சித்ராவை இழந்துவிட்டோம், இனி யசோதராவைத் திருமணம் செய்துகொண்டு புது வாழ்வு தொடங்கலாம் என்று பீஜகுப்தன் தீர்மானிக்கும்போது, சிவன் காதல் தெரியவருகிறது. மனம் குழம்புகிறது. விரைவில் தெளிவுபெற்று, தன்சொத்து முழுவதையும் சிவனுக்கு எழுதிவைத்து, யசோதராவையும் திருமணம் செய்துவைக்கிறான். இதைக்கேட்டறிந்த சித்ரா, சீறுகிறாள் யோகியிடம்—கேவலம் சிற்றின்பத்துக்காகப் பொய்பேசி என்னை ஏய்த்தீர். பற்று அற்றவரோ நீர்! யோகியோ? என்று ஏசிவிட்டு, எத்தனை இன்பத்திலே மூழ்கிக்கிடந்தாலும் அத்தனையையும் ஒரு நண்பனுடைய நல்வாழ்வுக்காகத் துறந்துவிட ஒப்பி முடிவெடுத்த குப்தனே உண்மையான யோகி, அவனிடம் பணிவிடை செய்வதே எனக்கு இனித்தவம் என்று கூறி பாடலிபுரம் செல்கிறாள்—விவரம் விளக்கம் பேசிக்கொள்கிறார்கள். சித்ராவும், குப்தனைப்போலவே செல்வம் சுகம் யாவற்றையும் துறந்துவிட்டு, குப்தனுடன் கிளம்புகிறாள், ஏழையாக.

ஓராண்டுக்குப் பிறகு இரு சீடர்களும், குருவிடம் சென்று தாம் கண்டவைகளைக் கூறுகின்றனர். காமக் களியாட்டத்தில் உழன்றபோதிலும், நினைத்தபோது எதையும் துறந்துவிடத் துணிவுபெற்ற பீஜகுப்தனே, முற்றுந்துறந்தவராக இருப்பினும் பேரழகியைக் கண்டபோது நிலைகுலைந்து, காமச்சேட்டையில் ஈடுபட்ட குமாரகிரியைவிட, மேலோன் என்று முடிவு செய்கிறார்கள்.

ஆகவே சீடர்களே! அவரவர்களின் சூழ்நிலைக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் அமையும், அதனை ஆராய்ந்து பார்த்தபிறகே எது பாபம் என்பதுபற்றி முடிவுகட்ட முடியும் என்று குரு கூறி சீடர்களை அனுப்பிவைக்கிறார்.

இத்தனைபேர்களுடைய வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையிலேயே, இதுதான் பாபம் என்று உறுதியாகக் கூறமுடியவில்லை என்கிறபோது, காக்கையால் கொத்தப்பட்டுச் சாக இருந்த குருவியை நான் எடுத்து கூண்டிலிட்டு வளர்ப்பது பாபம் ஆகாது, என்ற நினைப்புடன்தான், குருவியை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிறேன்.

9—5—64

நீண்ட பல நாட்களாக நடைபெற்றுக்கொண்டு வந்த மதுரை வழக்கு முடிவுபற்றி இன்று பத்திரிகையில் பார்த்துப் பதறிப்போனேன். ஏற்கனவே கிட்டத்திட்ட ஆறுதிங்கள் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த முத்துவுக்கும் அவரது குழுவினருக்கும் ஓராண்டு கடுங்காவல் தண்டனையும், குற்றம் செய்ய உடந்தையாக இருந்தார்கள், தூண்டிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட கருணாநிதி நடராசன் உள்ளிட்ட குழுவினருக்கு ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் மதுரைமுத்துவுக்கும் அவர் குழுவினருக்கும் ஒன்றரை ஆண்டு சிறை என்று ஆகிறது. மதுரை முத்து இதுகுறித்து மனக்கலக்கம் அடையமாட்டார் என்றாலும், அவருடைய குடும்பத்தினர் நிச்சயமாகக் கலங்கித்தான் போயிருப்பார்கள். பல திங்களாகவே முத்து, அறப்போர்பற்றியும், தண்டனை கடுமையாக இருக்கும் என்பதுபற்றியும், இல்லத்தாரிடம் சொல்லிவைத்திருப்பார் என்றாலும், அரசியல் சட்டம் கொளுத்தியதற்காக வேறு இடங்களில், மாதக்கணக்கிலே தண்டனை தரப்பட்டிருக்க, முத்துவுக்கும் அவர் குழுவினருக்கும் ஓராண்டு தண்டனை தரப்பட்டிருப்பது, வேதனையைத்தான் கிளறிவிட்டிருக்கும். நாங்கள், முத்து காவலில் இருந்துவரும் நாட்கள் அதிகப்பட அதிகப்பட, கவலைப்பட்டபடி இருந்தோம். ஆறு திங்கள் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பதால், தண்டனை அதிககாலத்துக்குத் தரமாட்டார்கள், சில மாதங்களே இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்த நானும், அதிர்ச்சி அடைந்தேன்.

தென்பாண்டி மண்டலத்தில், முத்துவின் பிரசாரப் பணி ஓராண்டுக்கு நடைபெற இயலாமற்போவது இயக்கத்துக்கு ஒரு நட்டம்தான் என்றாலும், அவர் சிறையில் இருப்பதை எண்ணி எண்ணிப் பல்லாயிரக் கணக்கினர் மனம் வேதனைப்படுவர் என்பதும், அந்த வேதனையே, இயக்கத்தை வளர்த்திடத்தக்க எழுச்சியாக மாறும் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது முத்து நீண்டகாலத் தண்டனை பெற்றிருப்பது இயக்கத்துக்கு மிகுதியான பயனையே இறுதியில் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று எண்ணி, என் மனதுக்கு ஆறுதல் தேடிக்கொண்டேன். முத்து, இதுபோல நீண்டகாலத் தண்டனைதான் தனக்குத் தரப்படும் என்று முன்பே எதிர்பாக்கும் தோரணையில் அறப்போருக்கு முன்பு மதுரை சென்றிருந்த என்னிடம் பேசிக்கொண்டிருந்த நினைவும், குடும்பத்தாருடன் என்னை வைத்துப் புகைப்படம் எடுத்துக்கொண்ட நிகழ்ச்சியின் நினைவும் என் நெஞ்சினில் தவழ்ந்தது. அறப்போரில் ஈடுபட்டவர்களிலேயே அதிககாலச் சிறைத்தண்டனை பெறும் வாய்ப்பை, முத்து பெற்றுவிட்டார் என்பது, அவரைப் பிரிந்திருக்கும்பொது வேதனையாகத் தென்பட்டாலும், பிறகு நமக்கெல்லாம் பெருமிதம் தரும் என்பதில் ஐயமில்லை.

கருணாநிதியும் நடராசனும், அறப்போரில் ஈடுபடுவதற்கான நாளை அவர்களே தேர்ந்தெடுத்து அறிவித்திருக்கிறார்கள். இடையிலே அவர்கள் ஆற்றவேண்டிய பணி நிரம்ப. எனவே, அவர்கள் தம்மீது தொடரப்படும் வழக்கு பற்றி உயர்நீதி மன்றம் வரை நீதி பெற முயற்சிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தண்டனை பெற்ற அனைவரும் திருச்சி சிறையில், இன்றிரவு இருக்கிறார்கள். நானும் நண்பர்களும் சென்னைச் சிறையில். இடையிலே இருநூறு கல் தொலைவு என்றாலும், காடு மலை கடந்து நெடுவழி தாண்டி என் எண்ணம், திருச்சிச் சிறையிலே உள்ள அறப்போர் வீரர்களிடம் செல்கிறது. இன்றிரவு அவர்கள் நினைவுடனேயே, இருப்பதால். தூக்கமும் எளிதாக வராது என்று எண்ணிக்கொண்டேன்; ஆனால் ஓரிரு மணி நேரத்துக்குப் பிறகு, தமிழ் காத்திடும் வீரர்கள் எங்கெங்கு உள்ளனர், எத்துணை ஆர்வத்துடன் பணி புரிகின்றனர், எவ்வளவு கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை எண்ணியபோது, ஒரு புது வித மகிழ்ச்சியே பிறந்தது; அந்த களிப்புணர்ச்சியைத் துணைகொண்டு கண்ணயரச் செல்கிறேன்.

11—5—64

நேற்று, ஞாயிற்றுக்கிழமை — உப்புச் சப்பற்ற விடுமுறை நாள். படிப்பதும் பேசிக்கொண்டிருப்பது மாகப் பொழுதை ஓட்டினோம்.

இன்று காலை பிறந்ததும், நாங்கள் நூற்பதற்காக ஒப்படைத்திருந்த ராட்டைகளையும் தக்ளியையும், அந்தத் துறையினர் எடுத்துக் கொண்டு போய்விட்டனர். கணக்கெடுக்கிறோம் என்று காரணம் கூறினார்கள்' நமது தோழர்களோ இதிலே ஒரு இரகசியம் இருக்கிறது, நாளை மறுநாள் விடுதலை செய்யப் போகிறார்கள் ஆகவேதான் இன்று இவைகளை எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்ற பேச்சைத் துவக்கிவிட்டார்கள். அவரவர்களுக்கு உள்ள வாதத் திறமையைக் காட்டினர். ஆனால் பேசிக்கொண்டிருக்கும்போதே அவர்களுக்கே தெரியும், சலுகை காட்டி விடுதலை செய்யப் போவதில்லை என்பது. என்றாலும், சிறையிலே எழும் பேச்சுகளில் இது மிக சுவைதரும் வகையானது என்பதால், பேசுகிறார்கள்.

இன்று உள்ளபடி மகிழ்ச்சி தரும் செய்தியை 'முரசொலி' தந்திருந்தது. நமது கழகத்தவர்மீது தொடரப்படும் பல்வேறு வழக்குகளை நாம் சந்தித்தாகவேண்டி நேரிட்டுவிட்டது; இதற்காகும் செலவுக்கான பணம், பொதுமக்களின் ஆதரவினால் கிடைக்கவேண்டும். இந்த நல்ல நோக்கத்துடன், சென்னைநகரில் ஒவ்வொரு வட்டத்திலும், தோழர்கள் 'உண்டி' வசூல் செய்து, கிட்டத்தட்ட ஆறு ஆயிரம் ரூபாய் திரட்டிய செய்தி பார்த்து மகிழ்ந்தோம். பொதுமக்களின் பேராதரவு கழகத்துக்கு வளருகிறது என்பதை எவரும் அறிந்து கொள்ள இது தேவைப்படுகிறது, கழகத் தோழர்கள், பொதுமக்களுடன் தோழமைத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் இது நல்ல வாய்ப்பாகிறது. இந்த நல்ல பணியில் ஈடுபட்டு பொருளும் புகழும் ஈட்டிய தோழர்களுக்கெல்லாம், நன்றி கூறிக்கொண்டேன்–இங்கிருந்தபடி. நான் வெளியே இருந்திருந்து இப்படி ஒருநிகழ்ச்சி நடைபெற்றிருந்தால், இத்தகைய வசூலின்போது, ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் ஒவ்வொரு வட்டமும் வசூலிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருப்பேன்.

விற்பனையாகிறது!

**அண்ணாவின்**
கருத்தோவியங்கள்

**பாவையின் பயணம்** ரூ. 1-50

**அரசாண்ட ஆண்டி** ரூ. 1-50

**மதுரைக்கு டிக்கட் இல்லை** ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

சில வட்டங்கள் ஐம்பது ரூபாய்க்கும் குறைவாகத் திரட்டி உள்ளது தெரிகிறது. வெளியே சென்றதும், அந்த வட்டங்களிடம் மிகுதித் தொகையைக் கேட்டுப் பெறப்போகிறேன் என்று இங்கு நண்பர்களிடம் கூறினேன்.

இரண்டு நாட்களாக மனித குலத்தின் வளர்ச்சி பற்றி ஆராய்ச்சி ஏடு ஒன்று படித்துக் கொண்டிருந்தேன். புல்லாகிப் பூண்டாகி என்று இங்கு தேனொழுகப் பாடிட, நம்மிடம் கவிதை இருக்கிறது, இல்லை என்று கூறவில்லை. ஆனால், இந்தத் துறையிலே, ஆண்டு பல உழைத்து நுண்ணறிவினர், ஆராய்ச்சி நடத்தி அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள் — மேனாட்டில். அவர்கள் அங்கு எடுத்துக்கொண்ட அரும்முயற்சிகளை வியந்து பாராட்டிப் போற்ற வேண்டியது முறையாயிருக்க, இங்கு நம்மிலே சிலர், இன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஆராய்ச்சி உண்மைகள் அவ்வளவும் அதற்கு மேலும் கூட, நம் நாட்டிலே வெகு பழங் காலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டன என்று பேசிக் கொள்வதிலே பெருமை இருப்பதாகக் கருதுகிறார்கள். புல்லாகிப் பூண்டாகி என்ற கவிதைகூட, உயிர்களின் தோற்றம், வளர்ச்சி எனும் அறிவு பெற அல்ல, பாவ புண்யங்களுக்கு ஏற்றபடி, பிறவிகள் எடுக்கப்படுகின்றன என்ற வைதீகக் கருத்தை விளக்க எழுந்ததேயாகும். பழம் பாடல்களை, இன்றைய ஆராய்ச்சி உண்மைகளை அன்றே தெரிவித்திட ஆக்கப்பட்ட அறிவுப் பாக்களாகும் என்று வாதிடுவது சுவை அளிக்கலாம், பயன் இல்லை. அந்தப் பாடல்கள் அந்நாட்களின் 'அருளாளர்'களின் கருத்தோவியங்கள், கண்டு பிடிப்புகளுக்கான வழிகளைக் கூறும் பாடங்கள் அல்ல, சொல்லிக்

கொள்ளலாம், சுவைக்காக. சந்திர மண்டலம் போக லாம் என்பதுபற்றி இன்று ஏதோ பெரிய ஆராய்ச்சி செய்கிறுர்களாம். இதனை மிகப் பெரிய விந்தை என்று பேசிக்கொள்கிருர்கள், ஆனல் வள்ளலார் நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே அங்கு நானும் வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே, என்பதாக, அன்றே பாடினர்—உங்களுடைய அவ்வளவு ஆராய்ச்சியையும் ஒரே அடியிலே அடக்கிக் காட்டிவிட்டார், என்று பேசிக்கொள்ளலாம். பயன் கன்ன? அவருடைய அந்த அடியை வைத்துக்கொண்டு, தைப்பூசத்துக்குப் பயன் படுத்தினேமேயன்றி, வெண்ணிலா இருக்கும் இடம் செல்ல வழி என்ன என்று ஆராய்ச்சி நடத்த அல்ல' இன்றைய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் யாவும், தமிழகத்தில் பழங்காலத்திலே அறிந்திருந்தனர் என்று விளக்க, இது போன்ற சில பல கவிதைகளைப் பின்னி எழுதப்பட்ட ஒரு தமிழ் ஏடு பார்த்துவிட்டு, அன்பழகன் அதில் உள்ளவைகளைப் படித்துக் காட்டி, இதுபோல என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். தமிழ்ப் போசிரிய ராகப் பச்சையப்பன் கல்லூரியில் அவர் பணியாற்றிய நாட்களில், அவருடைய வகுப்பறை எவ்வளவு சுவை யாக இருக்திருக்கும், எவ்வளவு பயனளித்திருக்கும் என்று அன்று ஓரளவு உணர முடிந்தது.

நான் படித்துக் கொண்டிருந்த, மனித குல ஆராய்ச்சி பற்றிய ஏடு, பாசுரங்கள், அருளாளர் வாக்கு கள் ஆகியவைகளிலே இருந்து அடிகளைப் பெயர்த் தெடுத்து. பிழிந்து, இதோ ஆராய்ச்சியாளரின் கண்டு பிடிப்புகளின் கருப்பொருள் என்று கூறிடும் முறை யிலே எழுதப்பட்டதல்ல. கற்காலத்துக்கு முன்புஇருந்த நிலையிலிருந்து, கற்காலம், நாடோடிகளாக வாழ்க்கை நடத்திய காலம், பயிரிட்டுப் பிழைத்த காலம் என்று, மனித குலம் படிப்படியாகப் பெற்ற வளர்ச்சியின் தன்மைகளை, புதை குழிகளில் கிடைத்த எலும்புக் கூடுகள், அந்த எலும்புகளிலே காணப்பட்ட வெட்டுக் காயக் கோடுகள், சாம்பற் குவியல், குகைகளிலே காணப்பட்ட கற்கருவிகள், அந்தக் குகைகளின் சுவர் களிலே தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் என்பன போன்ற

## காஞ்சி' சந்தாவிகிதம்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 10—00 |
| ஆறுமாத சந்தா | ரூ. | 5—00 |

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

வைகளை, அடர்ந்த காடுகள் சூழ்ந்துள்ள இடங்களில் மனித நடமாட்டமற்ற இடங்களிலே கல்லி எடுத்து அவைகளின் தன்மைகளிலிருந்து காலத்தைக் கணக் கெடுத்து, அன்று இருந்தவர்களின் வாழ்க்கை முறை களையும் கண்டறிந்து, கூறப்பட்டுள்ள ஏடு, பொழுது போக்காக ஒருமுறை படித்துவிட்டு, புரிந்துவிட்டது என்று சொல்லிவிடத்தக்க ஏடு அல்ல. பல முறை படித்திடவும், சிந்தித்துப் பொருள் பெறவும் வேண்டும். இன்று பெரும் பகுதி அந்த நூலைப் படிப்பதிலேயே செலவிட்டு மகிழ்ச்சி பெற்றேன்.

12—5—64

இப்போது, குருவிகள் நான்கு உள்ளன—ஆமாம், காக்கைகளிடமிருந்து தப்பி எங்களிடம் கிடைத்தவை யும், நண்பர் ஏகாம்பரம் கூடையைக் கண்ணியாக வைத்துப் பிடித்த குருவியும். பகலில் அறைக்கு வெளியே கூண்டு வைக்கப்படுகிறது; அருகில் நான் அமர்ந்து கொண்டோ, படுத்துக் கொண்டோ, குருவிகளின் நடமாட்டத்தின் வேடிக்கையைப்பார்த்துக் கொண்டிருக்கிறேன் ஒவ்வொரு விநாடியும். குருவிகள் எப்படி கூண்டை விட்டு வெளியே செல்வது என்ற முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளன; இடையிடையே தீனி பொறுக்குகின்றன; இந்தக் குருவிகளிலே ஒன்றி னுடைய தாய்க் குருவி மட்டும், கூண்டுக்கு வெளியே வட்டமிடுவதும், குஞ்சுக்கு வெளியே இருந்தபடியே தீனி கொடுப்பதுமாக இருக்கிறது. மற்ற குருவிகள் தாமாகத் தீனி தின்றிடும் பக்குவம் அறிந்துகொண்டு விட்டன. இது ஒன்று மட்டும், தாயின் உதவியைப் பெறவேண்டிய பருவத்திலிருக்கிறது. அந்தத் தாய்க் குருவியும், மிகுந்த பாசத்துடன், குஞ்சுக்குத் தீனி கொடுக்க, அடிக்கடி கூண்டு இருக்குமிடம் வருகிறது. இரவு கூண்டு என் அறையில். என்னேடு பொன்னு வேலுவும் வெங்காவும் இருப்பதால், காவலாளிகள் கணக்கெடுக்க வரும்போது, 'மூன்று' என்று வழக்க மாக கணக்குக் கொடுப்பதுண்டு; இப்போது ஏழு என்று வேடிக்கையாகக் கணக்குக் கொடுக்கிறோம்.

16—5—64

இரண்டு மூன்று நாட்கள் குறிப்பு எழுதவில்லை. நிகழ்ச்சிகளில் புதுமையும் இல்லை. குறிப்பிடத்தக்கவை யாகவும் இல்லை. சிந்தனையில் தோன்றியவைகளை எப்படி இங்கு வடித்துக்காட்ட முடியும்? பகலில், அரசி யல் பிரச்சினைகள் பலபற்றி நண்பர்களுடன் பேசுவது, இரவு அறையில் அமர்ந்து வரைவது, எழுதுவது, படிப் பது இப்படி. ஷேக்அப்துல்லாவின் முயற்சிகளைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம்; அப்துல்லாவிடம் நட்புறவு காட்டி ஆச்சாரியார், ஜெயப்பிரகாசர், விநோபா ஆகிய மூவரும் பிரச்சினைதீர வழிகளைக்கூறி இருப்பதாகச் செய்தி வந்திருப்பதுபற்றி நண்பர்கள் விளக்கம் கேட் டார்கள். ஆராயத்தக்க விதமான வடிவத்தில் இன்னும் எந்த வழியும் எடுத்துக்காட்டப்படவில்லை, எனவே இப் போது இந்தப் பிரச்சினையில் அவசரமோ, பரபரப்போ

காட்டவேண்டிய அவசியம் எழவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பாகிஸ்தானும் ஒப்புக் கொள்ளத்தக்க ஒரு சமரசத்திட்டம் கிடைக்க முடியுமா என்பதிலேயே எனக்கு ஐயப்பாடு எழுகிறது. ஜன நாயக முறையைக் குலைத்துவிட்ட ஒரு அதிபரின் கீழ் பாகிஸ்தான் இருக்கும்போது, அங்கிருந்து நட்புறவு, சமரசம், தோழமை என்பவை கிடைக்க முடியு மென்றும் எனக்குத் தோன்றவில்லை என்று நான் கூறி னேன். பண்டித நேருவிடம் கொண்டுள்ள பயபக்தி விசுவாசம் காரணமாகவே, காங்கிரசில் உள்ள மற்றத் தலைவர்கள் அப்துல்லாவை எதிர்க்காமலிருக்கிறார்கள் என்பதும் நன்ருகத் தெரிகிறது என்பதுபற்றியும் பேசிக்கொண்டிருந்தேன்.

காஞ்சிபுரத்தில், அரசியல் சட்ட மொழிப்பிரிவைக் கொளுத்துவதன் மூலம், தமிழகத்திலுள்ள இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை எடுத்துக்காட்டிய அறப்போர் வீரர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோவிந்த சாமி, கம்பராசபுரம் இராசகோபால், காஞ்சிபுரம் துரை அச்சக உரிமையாளர் சம்பந்தம், சீதாபுரம் ராமதாசு, மாதவரம் வேதாசலம் ஆகிய ஐவருக்கும் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும், அந்த நிகழ்ச்சியின்போது தொடர்பு வைத்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டப் பட்ட, மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, நகர செயலாளர் மார்க், பொதுக்குழு உறுப்பினர் சபாபதி ஆகிய மூவருக்கும் ஆறுவாரக் கடுங்காவல் தண்டனையும், செங்கற்பட்டு வழக்கு மன்றத்திலே விதிக்கப்பட்டு, நிகழ்ச்சியில் பங்கேற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த நெல்லிக்குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி B.A.B.L.,வும், காட்டுமன் ஞர்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தியும், குற்றம் மெய்ப்பிக்கவிடவில்லை என்பதனால் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றும் இதழ்கள் மூலம் செய்தி கிடைத்தது.

மதுரையில் முத்து குழுவினருக்கு ஓராண்டு தண் டனை தரப்பட்டது கண்டு, இங்கும் அதுபோல இருக் கும் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். நான் சற்று அதிகமாகவே கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆகவே ஆறுதிங்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது ஒருவிதமான ஆறுதல் அளித்தது.

தண்டனைதான் ஆறு திங்களே தவிர, அவர்கள் வழக்கு நடைபெற்று முடிய எடுத்துக்கொள்ளப்பட்ட 4 மாதங்களும் சிறையிலே இருந்து வந்தனர். ஆக மொத்தத்தில் பத்து மாதச் சிறை என்று ஆகிறது.

தோழர் கோவிந்தசாமி சிறையில் இருக்கும்போது அடுத்தடுத்து அவருடைய அண்ணனும், அக்காவும் காலமாகிவிட்டனர். அதனால் ஏற்பட்ட வேதனையை யும் சுமந்துகொண்டு அவர் சிறையிலே அடைபட்டுக் கிடந்தார்.

தோழர்களைச் சென்னைச் சிறைக்கு எப்போது அழைத்து வருவார்கள் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தோம். அவர்களுக்கும், சிறை செல் கிறோமே என்ற கலக்கமோ கவலையோ எழுந்திருக் காது, சென்னைச் சிறையில் என்னையும் மற்ற நண்பர் களையும் காணலாம், உடனிருந்து மகிழலாம் என்ற எண்ணம்தான் ஆர்வமாக எழுந்திருந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

தமிழகத்தில், இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடு பட்டு, தண்டனைபெறும் கழகத் தோழர்கள் அனைவரை யும் ஒரே ஊரில், ஒரே சிறையில் வைத்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதுபற்றிப் பேசிக்கொண் டிருந்தோம்.

18—5—64

இரண்டு நாட்களாக கோவிந்தசாமியும் மற்றவர் களும் வருவார்கள், வருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தோம். ஒருசமயம் அவர்களை வேலூர் சிறைக்கு அழைத்துச் சென்றுவிட்டிருக்கக்கூடும் என்று எண்ணிக்கொண்டோம். சிறையிலே அவ்வித மான வதந்தியும் பரவிவிட்டது. ஆனால் பகல்பனிரண்டு மணி சுமாருக்கு எட்டுத் தோழர்களும், கலியாண வீட் டுக்குள்ளே நுழைவதுபோல, புன்னகையுடன் வந் தனர். வெளி உலகத்திலிருந்து வருகிறார்கள் அல்லவா —சிறை உலகிலே இருந்துவரும் எங்களுக்கு அவர் களைக் காண்பதிலே, சேதிகள் கேட்டறிவதிலே, தனி இன்பம் பிறப்பது இயற்கைதானே. இப்போது இந்தப் பகுதியில் நாங்கள் 20-பேர் இருக்கிறோம்—மதி மருத் துவமனையிலிருந்து வரவில்லை — அவரோடு சேர்த் தால் 21.

வந்தவர்கள், அறப்போர் நிகழ்ச்சிகள், மக்கள் காட்டிய ஆர்வம், வழக்குமன்ற விவரங்கள் ஆகியவை பற்றிக் கூறினார்கள். நாங்கள் சிறையில் உள்ள நிலைமைகள்பற்றிக் கூறினோம். மீஞ்சூர் கேசவன் அணியினரும், பூவிருந்தவல்லி சின்னசாமி குழுவின ரும் விடுதலையாகிச் சென்றதைச் சொன்னோம். விவர மெல்லாம் நடராசன் கூறினார், அவரும் மதியின் இளவல் கிட்டுவும், சிறைவாயிலில் எங்களைக்கண்டு



பேசினார்கள் என்று கோவிந்தசாமி கூறினார். அவருடைய வேதனையை உணர்ந்து, சில வார்த்தைகள் ஆறுதல் கூறினேன். தம்மை சிறுவயதுமுதல் பாசத்தோடு வளர்த்து வந்தவர்கள் தனது அக்காதான் என்பதை, கோவிந்தசாமி கூறிக் கண்கலங்கினார்.

இரண்டு நாட்களாக, மனிதகுல வரலாறுபற்றிய (மற்றொரு) புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். இது, கற்காலத்தில் இருந்தநிலையிலிருந்து படிப்படியாக மனிதகுலம் எவ்விதமெல்லாம் மாறுதல் அடைந்தது என்பதுபற்றிய ஆராய்ச்சி ஏடு அல்ல. மிகப் பழங் காலத்திலிருந்து உலகிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கதை வடிவிலே எடுத்துக்காட்டும் ஏடு. மொத்தத்தில் 30-கதைகளில், கி. மு. 30,000 ஆண்டிலிருந்து கி. பி. 1860-ம் ஆண்டுவரை, குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

காட்டுமிருகங்களைக் கூட்டிவைத்து, இரண்டு காலுள்ள ஒரு பிராணியைக் கண்டேன், இனி நமக்கு ஆபத்து உண்டாகும் என்று ஒரு குரங்கு கூறுகிறது, கி. மு. 30,000-ல். அடுத்தகதை கி. மு. 15000—கற்காலத்துச் சூழ்நிலைபற்றியது; பிறகு கி. மு. 3500, கி. மு. 1152; கி. மு. 480, கி. மு. 300, கி. மு. 200, கி. மு. 100, கி. மு. 55 என்று தொடர்ந்து, கி. பி. 1492, அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்ச்சி, கி. மு. 1736, நீராவி பற்றிய ஆராய்ச்சியின் துவக்கம், கி. மு. 1860-விடுதலை உணர்ச்சி எழும்பியது, என்ற முறையில், புத்தகம் அமைந்திருக்கிறது. இதிலே, வியப்பு என்னவென்றால் இது பத்துவயதுச் சிறுவர்களுக்கு, உலக வரலாற்று நிகழ்ச்சிகளை ஓரளவுக்கு அறிமுகப்படுத்திவைக்க எழுதப்பட்ட புத்தகம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது முன்னுரையில்—புத்தகம் 1930-க்கு முன்பு அச்சிடப்பட்டது. மற்ற நாட்டு மாணவர்களுக்கு அறிவுபுகட்ட எத்தகைய நேர்த்தியான ஏடுகளெல்லாம் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதை உணரச் செய்கிறது இந்த ஏடு.

19—5—64

வழக்கமான — பார்வையிடுதல், ஆனால் இந்த முறை, எங்களுக்குப் புதுமகிழ்ச்சி—புதியவர்களுடன் நிற்கிறோம் அல்லவா—மொத்தம் இருபதுபேர், இங்கு மட்டும்—உள்ளே வேறு இருக்கிறார்கள். எட்டுப்பேருக்கும் அவசரம் அவசரமாகக் கைதி உடை தரப்பட்டு, அணியில் நிறுத்தப்பட்டனர். இங்கு எல்லாக் கைதிகளைக் காட்டிலும், உயரம், உடற்கட்டு, பார்வையில் உறுதி எல்லாவற்றிலும் மேலானநிலை, கம்பராசபுரம் ராசகோபாலுக்குத்தான். சிறை மேலதிகாரிகள் பார்வையிட்டுக்கொண்டு சென்றபோது, அவர்கள் மனதிலே எழாமலா இருந்திருக்கும், நல்ல நல்ல ஆட்களப்பா, தி. மு கழகத்தில் என்ற எண்ணம்!

இன்று மேலும் மகிழ்ச்சி எழத்தக்கவிதத்தில், திருச்சியில் பல்வேறு முனைகளிலே அறப்போரில் ஈடுபட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் அம்பில் தருமலிங்கம், எம். எஸ். மணி, அழகமுத்து, ஜெகதாம்பாள் வேலாயுதம், வெங்கலம் மணி, அரியலூர் நாராயணன் புதுக்கோட்டை தியாகராசன் உள்ளிட்டு, மொத்தத்தில் 250-க்கு மேற்பட்டவர்கள் 'கைது' செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றிரவு மதுரை முத்து, அவர்களைத் திருச்சி சிறையில் வரவேற்றிருப்பார் என்று கருதுகிறேன். அந்தத் தோழர்களுக்கு மத்தியில் நான் இருப்பதற்கில்லையே என்று ஒருகணம் கவலைகூடப்பிறந்தது. பிறகோ எங்கு இருந்தால் என்ன—தொலைவு நம்மைப் பிரித்துவைக்க முடியாது — அவர்கள் நெஞ்சிலே நாம், நமது நெஞ்சிலே அவர்கள் என்ற எண்ணம் மலர்ந்தது. எது சிதைக்கமுடியும்? பேசி மகிழ்ந்திருங்கள். தோழர்களே! நாங்கள் இங்கே உங்களைப்பற்றித் தான் பேசி மகிழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று நானாகக் கூறிக்கொண்டேன்.

இன்னும் நாலு நாட்களில், சுந்தரம், வெங்கா, பொன்னுவேல், பார்த்தசாரதி ஆகிய நால்வரும் விடுதலை ஆகிறார்கள்.

இன்று காலையிலிருந்து காஞ்சிபுரம் மணி, சுந்தரத்தை, பெயரிட்டுக் கூப்பிடுவதில்லை—"என்னய்யா, நாலு நாளு!" என்றுதான் அழைக்கிறார்.

20—5—64

திருச்சி மாவட்டத்தில் அறப்போரில் ஈடுபட்டவர்களில் பலருக்கு உடனுக்குடன் விசாரணை நடைபெற்று நான்கு, மூன்று, இரண்டு திங்கள் என்ற முறையில் தண்டனைகள் தரப்பட்டுவிட்ட செய்தி பார்த்தோம். வழக்கு தயாரிப்பதாகக் கூறிக்கொண்டு மாதக்கணக்கிலே தோழர்களைச் சிறையில் அடைத்து வைத்திருக்கும் கொடுமைக்குத் திருச்சி மாவட்டத் தோழர்கள் ஆட்படுத்தப்படாதது மிக்க மகிழ்ச்சிதந்தது. எதிலுமே திருச்சி மாவட்ட கழகத் தோழர்கள் நல்ல வாய்ப்புப் பெறுபவர்கள்—தொடர்ந்து. திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியதும் நடைபெற்ற முதல் மாநாடு திருச்சியில்தானே! பொதுமக்களின் நல்லாதரவைத் திரட்டி சென்ற பொதுத் தேர்தலின் போது சிறப்புமிக்க வெற்றிகளையும் ஈட்டிய இடம், திருச்சி மாவட்டம். மற்ற எல்லா மாவட்டங்களிலும் கழகத்துக்கும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் தேர்தல் சமயத்திலே மோதுதல்-திருச்சி மாவட்டத்திலே மட்டும், 'தழுவுதல்' இருந்தது. பல நல்ல வாய்ப்புகளைப் பெற்று வருவது போலவே, திருச்சி மாவட்டம், அறப்போர் வீரர்களின் எண்ணிக்கையிலும் மற்ற மாவட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

இன்று திருப்பெரும்பூதூர் தொகுதி திருத்தி அமைக்கப்படும் முறைபற்றி அண்ணாமலையிடம் பேசிக்கொண்டிருந்தேன். இந்தத் தொகுதியில்அமைச்சருக்குக் கிடைத்ததைவிட எந்த வட்டத்தில் தனக்குக் கிட்டத்தட்ட 4000 வாக்குகள் அதிகமாகக் கிடைத்ததோ அந்த வட்டத்தை வெட்டி எடுத்து, அதனை கடம்பத்தூர் தொகுதியிலே இணைத்திருப்பது கழகத்துக்கு ஏற்படக்கூடிய நல்வாய்ப்பைக் குலைப்பதாக

அமையும் என்று கவலையுடன் கூறினர். மேலும் பல தொகுதிகளிலேயும், இதுபோன்ற நிலைமை ஏற்படுவதுபற்றி நண்பர்கள் எடுத்துக் காட்டினர்கள். இதற்குப் பரிகாரமே கிடைக்காதா என்று கேட்டனர். நிலைமையைப் பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதைத் தவிர நாம் வேறு என்ன செய்ய முடியும்?—இதற்காக அமைந்துள்ள குழு முடிவெடுத்தது, நாங்கள் என்ன செய்யமுடியும் என்று ஆளுங் கட்சி நியாயம் பேசும். எந்தத் தொகுதி எப்படி திருத்தி அமைக்கப்பட்டாலும், வெற்றி பொதுமக்களின் நல்லாதரவிலே இருக்கிறது, அந்த நல்லாதரவைப் பெறுவதிலே நாம் மும்முரமாக ஈடுபட வேண்டியதுதான்—வேறு பரிகாரம் என்ன இருக்கமுடியும் என்று நான் கூறினேன்.

இன்று பொதுவாக ஜனநாயக முறைகள் பற்றி, அன்பழகனிடம் பேசிக்கொண்டிருந்தேன். ஜனநாயகம் எத்தனை குறையுடையதாக இருந்தாலும், மக்கள் தமது கருத்தை அறிவிக்கவும், தம்முடைய நலனுக்கு ஏற்ற ஆட்சியை அமைத்திடும் முயற்சியில் ஈடுபடவும் வாய்ப்பு அளிக்கிறது. இந்த வாய்ப்பு முழுப் பலனைக் கொடுக்க, திருத்தங்கள், முறை மாற்றங்கள் தேவைப்படக்கூடும்—ஆனல் அடிப்படை ஜனநாயக முறையை மக்கள் பெற்றுள்ள மிகப் பெரிய வாய்ப்பு என்று கருதுவதிலே, மாறுபாடான எண்ணம் எழலாகாது. சிலருக்கு, தோல்வி காரணமாகவோ, தத்துவ விசாரம் காரணமாகவோ, ஜனநாயக முறையிலேயே ஐயப்பாடு ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இந்தப் போக்கு விரும்பத்தக்கது அல்ல. சிலர், கட்சிகளற்ற ஆட்சி அமைப்பு வேண்டும் என்கிருர்கள். மற்றும் சிலர், நேரடித்தேர்தல் முறையை விட, மறைமுகத் தேர்தல் முறை மேலானது என்கிருர்கள். ஆனல் எத்தகைய முறை மாற்றங்களைப் பற்றி அவர்கள் சிந்தனை செய்தாலும், ஜனநாயக முறையைவிட மக்களுக்கு நல்வாய்ப்பு தரத்தக்க வேறு முறை இருப்பதாக மட்டும் கூறமுடியாது; என்று கூறினேன். ஜனநாயக முறையிலே சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் பல நாடுகளிலேயும் எழும்பிக்கொண்டு வருகிறது என்பதைக் காட்டக்கூடிய ஒரு புத்தகம் இன்று படித்தேன். கற்பனைதான்—ஆனல் அதிலே ஒரு கருத்தோட்டமும் இருக்கிறது. 1980 பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பு எவ்விதம் இருக்கும், பிரிட்டனில் முடியாட்சி முறை இருக்குமா, ஜனநாயக முறையிலே என்னென்ன புதுமைகள் புகுத்தப்படும் என்பதுபற்றி யெல்லாம் நெவில்ஷட் என்பவர் எழுதியுள்ள இந்தப் புத்தகத்தில் கோடிட்டுக் காட்டப்படுகிற கதை வடிவம். பிரிட்டனில் முடியாட்சி இருககிறதே தவிர, முடிதரித்தோருக்கு உரிமைகளும் சலுகைகளும் படிப்படியாகக் குறைக்கப்பட்டுவிடுகின்றன. 1980-ல், பிரிட்டனில் ராணிதான் ஆட்சி செய்கிருர், ஆனல், அவர் தமக்குப் பிறகு தம் மக்கள் மன்னர்களாக இருக்கவேண்டும் என்ற விருப்பம்கூட எழவில்லை. முடி தரித்துக்கொண்டு, ஆட்சியின் பிடி அவ்வளவையும் மக்கள் மன்றத்திடம் ஒப்படைத்து விட்டு இருப்பதில், பசையும் இல்லை, ருசியும் இல்லை என்று தோன்றுகிறது. முடிமன்னர்களின் செலவுபற்றி கணக்குப் பார்ப்பதும், கேள்வி எழுப்புவதும் சரியல்ல, முறையல்ல என்ற மரபு கூட 1980-ல் எடுபட்டு விடுகிறது. எந்தச் செலவானுலும் மக்கள் மன்றத்தின் ஒப்பம் பெற்ருக வேண்டும் என்று ஆகிவிடுகிறது. பிரிட்டனில் நிலைமை இவ்விதம் ஆகிவிடும்போது, காமன்வெல்த்தில் இணைந்துள்ள கானடாவிலும், ஆஸ்திரேலியாவிலும், ராஜபக்தி ஓங்கி வளருகிறது; மகாராணிமின் செலவுக்காகத் தாராளமாகப் பணம் வழங்க அந்த நாடுகள் முன்வருகின்றன. ராணியே, இரண்டொரு மாதங்கள் மட்டுமே பிரிட்டனில் தங்கி இருப்பது, பெரும் பகுதி நாட்களை கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் கழிப்பது என்று திட்டமிடுகிருர்கள்.

ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் பிரிட்டிஷ் ராணியிடம் 'பக்தி விசுவாசம்' காட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியைவிட, சுவையுள்ள சிந்தனையைக் கிளறிவிடும் பகுதி, ஓட்டுகள் பற்றியது. ஆஸ்திரேலியாவில், 'ஒருவருக்கு ஒரு ஓட்டு' என்ற ஜனநாயக முறை மாற்றப்பட்டு, ஒருவர் ஏழு ஓட்டுகள் வரை பெறத்தக்க வாய்ப்பு அளிக்கப்படும் முறை புகுத்தப்படுகிறது—கதையில். செல்வவான்களும், படித்தவர்களும் மட்டுமே ஓட்டு உரிமை பெற்றிருக்கும் முறை மக்களாட்சிக்கு வழி கோலாது—மேல்தட்டிலுள்ளவர்களின் ஆதிக்கத்துக்குத்தான் வழி அமைக்கும் ஆகவேதான், நீண்ட கிளர்ச்சிக்குப் பிறகு, வயது வந்தவர்கள் அனைவருக்கும், படித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், சொத்து இருந்தாலும் இல்லை என்ருலும் ஓட்டு உரிமை உண்டு என்ற திட்டம் கிடைத்தது. ஒருவருக்கு ஒரு ஓட்டு என்ற திட்டம், ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகி விட்டது.

இந்த முறை மாற்றப்பட்டு, ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஓட்டுகள் கிடைக்கத்தக்க ஒரு முறை, ஆஸ்திரேலியாவிலே புகுத்தப்படுகிறது என்று 1980ல், நிலைமை எப்படி இருக்கக்கூடும் என்ற கற்பனையைக் கதை வடிவிலே தருபவர் தெரிவிக்கிருர்.

ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையின்படி, வயதுவந்த அனைவருக்கும், படிப்பு, உடமை உண்டா இல்லையா என்று பார்க்காமல், விஷயங்களைப் புரிந்து கொள்ளத்தக்க வயது வந்திருக்கிறதா என்பதைக் கவனித்து, ஓட்டு தரப்படும் முறை அகற்றப்படவில்லை, அனைவருக்கும் அந்த ஒரு ஓட்டு இருக்கிறது—அடிப்படை ஓட்டு. ஆனல் அத்துடன், வேறு ஆறு விதமான காரணங்களால், ஓட்டுகள் வழங்கப்படுகின்றன. அனைவருக்கும் அடிப்படை ஓட்டு வழங்கப்பட்ட பிறகு, கல்வியாளர்களுக்கு, அவர்கள் கல்வி காரணமாகப் பெறும் புதிய தகுதி, பொறுப்பு இவற்றைக் குறிப்பில் வைத்து, இரண்டாவது ஓட்டு தரப்படுகிறது. எவரெவர், தமது நாட்டு நன்மைக்காக வெளிநாடுகள் சென்று பணியாற்றி இருக்கிருர்களோ-குறிப்பாக போர்முனைப் பணி

யாற்றியவர்கள்—அப்படிப்பட்டவர்களுக்கு, அதற்காக ஒரு ஓட்டு கிடைக்கிறது—மொத்தத்தில் மூன்று ஓட்டு கள் அவர்களுக்கு. விவாக விடுதலே செய்துகொள்ளா மல், குடும்பம் நடத்தி, இரண்டு மக்களைப் பெற்று, அவர்களைப் பதினுன்கு வருஷங்கள்வரையில் ஆளாக்கி விடுபவருக்கு, குடும்பக் கடமையைச் செவ்வனே செய்து முடித்தவர் என்பதற்காக, ஒரு ஓட்டு கிடைக் கிறது—குடும்ப ஓட்டு. எவரெவர், தொழில் நடத்தி, பொருள் ஈட்டி, நாட்டின் மொத்தச்செல்வத்தை வளர்க் கிறுர்களோ அவர்களுக்கு, அந்தத் துறையில் ஈட்டிய வெற்றிக்காக ஒரு ஓட்டு தரப்படுகிறது. மார்க்கத் துறையில், தூய பணியாற்றுபவருக்கு, அந்த தனித் தகுதி காரணமாக ஒரு ஓட்டு தரப்படுகிறது. சிறப்பு இயல்பினர் என்று ராணியார் கருதி, சிலருக்கு, ஒரு ஓட்டு அளிக்கிறுர்கள், இப்படி ஒரு சிலருக்கு ஒரு ஓட்டு என்பது மாறி, ஒருவருக்குப் பல ஓட்டுகள், ஒவ்வொரு தனித் தன்மைகளுக்காக—மொத்தத்தில் ஏழு ஓட்டு கள் என்ற புதுமுறை புகுத்தப்பட்டிருக்கிறது—ஆஸ்தி ரேலியாவில்—கதையில்.

கதைதானே என்று கூறிவிடுவதற்கில்லை — ஒரு வருக்கு ஒரு ஓட்டு என்பது பொதுநீதி என்றபோதிலும் ஜனநாயகம் செம்மையடைய வேண்டுமானல், மக்க ளிடை ஏற்படும், அல்லது மக்களில் சிலரோ பலரோ பெறும், தனித்தன்மைகள், திறமைகள், தகுதிகள் ஆகியவற்றை புறக்கணித்துவிடக்கூடாது—அவர்கள் எல்லோரிலும் இருக்கிறுர்கள் ஆனல் சில தனிச் சிறப்புகளேயும் பெற்றிருக்கிறுர்கள், ஆகவே எல்லோ ருக்கும் இருப்பதுபோல அவர்களுக்கும் ஒரே ஒரு ஓட்டு என்பது முறையாகாது என்ற கருத்து, இந்தக் கதை வாயிலாக வலியுறுத்தப்படுகிறது. இந்த ஏற்பாட்டின் படி, ஒருவருக்குப் பல ஓட்டுகள் கிடைப்பதால், தேர்த லின்போது அவருடைய முக்கியத்துவம் அதிகமா கிறது. சில தகுதிகளைப் பெற்றுல், ஒரு ஓட்டுடன் மற் றும் ஒன்றே இரண்டோ கிடைக்கும் என்ற நிலை இருப் பது காரணமாக, மக்கள், அந்த அதிக ஓட்டுகளைப் பெறுவதற்காக, தனித்திறமைகளைப் பெற முனைவார் கள்—அதன் காரணமாக, சமூகத்தின் மொத்தத் தரம் உயரும், என்று கருத்து எடுத்துக் காட்டப்படுகிறது.

ஒருவருக்கு ஒரு ஓட்டு என்பதுதான் ஜனநாயகத் திலே அடிப்படையாக இருக்கிறது என்றுலும், இப் போதேகூட, ஒருவர் பி.ஏ., பட்டதாரியாக இருந்தால், அவருக்கு எல்லோருக்கும் கிடைக்கும் அடிப்படை ஓட்டு மட்டுமல்லாமல் பட்டதாரி என்பதற்காக, ஒரு ஓட்டு கிடைக்கிறது. அவர் இரண்டு ஓட்டுகளுக்கு உரிமையாளர். அவரே, மாநகராட்சிமன்றம், நகராட்சி மன்றம் ஆகியவற்றிலே உறுப்பினரானல், அந்த மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் களுக்கு ஓட்டு அளிக்கும் உரிமையும் கிடைக்கிறது— ஆக அவருக்கு மொத்தத்தில் மூன்று ஓட்டுகள். ஒருவர் பி. ஏ., படித்திருந்து, ஆசிரியராகப் பணியாற்றினல், பொது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, அதிலே கலந்துகொள்கிறுர் — அதற்கு ஓட்டு இருக் கிறது; பிறகு பட்டதாரிகள் தொகுதித் தேர்தலின் போது கலந்துகொள்கிறுர், அதிலே ஓட்டு இருக்கிறது, மூன்ருவதாக ஆசிரியர் தொகுதியில் தேர்தல் நடை பெற்றுல் அதற்கும் ஓட்டளிக்கிறுர்—ஆக அவருக்கு 3 ஓட்டுகள். ஆனல் பொதுவாக, ஜனநாயக அடிப் படை என்று நாம் கூறுவது ஒருவருக்கு ஒரு ஓட்டு என்பதைத்தான். அந்த அடிப்படை நடைமுறையில் இருக்கும் நாடுகளிலேயே இதுபோல மூன்று ஓட்டுகள் பெறுகிற உரிமை சிலருக்கு வழங்கப்பட்டிருக்கிறது— சில தனித் தன்மைகள் சிறப்புகள் காரணமாக.

அண்ணன்,

அண்ணாதுரை

---

அறிக்கை:—

## "காஞ்சி"

| | |
|---|---|
| 1. வெளியாகும் இடம் | ...86, திருக்கச்சிநம்பி தெரு சின்ன காஞ்சிபுரம். |
| 2. வெளியிடும் நாட்கள் | ...வாரம் ஒருமுறை |
| 3 அச்சிடுபவர் பெயர் | ...சி.என்.ஏ. இளங்கோவன் |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...86, திருக்கச்சிநம்பி தெரு சின்ன காஞ்சிபுரம். |
| 4. வெளியிடுபவர் பெயர் | ...சி.என்.ஏ. இளங்கோவன் |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...86, திருக்கச்சிநம்பி தெரு சின்ன காஞ்சிபுரம் |
| 5. ஆசிரியர் பெயர் | ...சி. என். அண்ணுதுரை |
| இனம் | ...திராவிடர் |
| முகவரி | ...54, வரகுவாசல் தெரு, சின்ன காஞ்சிபுரம். |
| 6. பத்திரிக்கையின் உரிமையாளர்களுடைய பெயர்களும்முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும் | சி.என்.ஏ. இளங்கோவன் 86, திருக்கச்சிநம்பி தெரு சின்ன காஞ்சிபுரம். |

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங் கள் யாவும் உண்மையானவை என்று சி. என். ஏ. இளங்கோவனுகிய நான் அறிவிக்கிறேன்.

7—3—65 (ஒப்பம்) சி. என். ஏ. இளங்கோவன்.
வெளியிடுவோர்.

# லட்சாதிபதி!

— பழி —

“இல்லிங்களே-”

“பாருங்க செட்டியார்”

“உங்களுக்கா இல்லேங்கப் போகிறேன். இருந்தா கேக்கணுமா?”

“ரொம்ப அவசரம். இல்லையானு உங்களுக்குத் தொந்தரவு கொடுப்பேனு?”

“அதுசரி. நீங்களும் ரொம்பநாள் வாடிக்கை நாணயமான கை. என் கையிலேயோ சரக்கு இல்லை. என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க? ம்....சரி. சாயந்திரம் 6 மணிக்கு மேலே வாங்க பார்க்கலாம்”

“கட்டாயம் ஏற்பாடு பண்ணவேணும், கைவிரிச்சுடக்கூடாது. உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்”

“சரி. வாங்க, கையோடு ரூபா கொண்டுவாங்க வீசை-” என்று சொல்லி மூன்று விரல்களைப் பிரித்துக் காட்டினுர் செட்டியார்.

அந்தத் தெருமுனையில் செட்டியார் கடை வைக்கும்போது “என்ன வியாபாரம் இங்கே நடந்துவிடும் என்று செட்டி கடைவைக்கிருனே?” என்று தான் சிலர் எண்ணினர். அப்போது அவர் செட்டியார், அல்ல--செட்டி தான். செட்டியாரும் மிகுந்த நம்பிக்கையோடு கடையைத் துவக்கவில்லை. ஏதோ திண்ணையிலே குந்தியிருப்பதைக் கடையிலே குந்தியிருக்கலாமே என்றுதான் கடையைத் தொடங்கினுர். ஆனல் நாளடைவில், அவருக்கே திகைப்பு தரும் வகையில் வியாபாரம் தழைத்தது. அவ்வப்போது சிலசில சரக்குகளுக்கு ஏற்பட்ட கிராக்கி அவருக்குப்பெரிய உதவியாக வந்து சேர்ந்தது. ஒரு ரூபாய்க்கு வாங்கிய சாமான், நாலு ரூபாய்க்குக்கூட விற்றது. சாமான், கிடைக்காதபோது அளவும் நிறையும்கூட செட்டியார் விருப்பப்படி தான். வியாபாரம் தழைத்ததைப் போலவே அவருடைய உடலும் தழைத்தது - பருத்தது என்பது பொருத்தமான சொல். செட்டி என்று சொன்னவர்கள் செட்டியார் என்று சொல்லத் தலைப்பட்டார்கள். செட்டியாரும், அழகுக்காக நெற்றி நடுவில் மட்டும் மெல்லிய சிவப்புக் கோடாக இட்டுக்கொண்டிருந்த ஒற்றை நாமத்தை, இருபக்கமும் வெள்ளையைத் தாராளமாகக்குழைத்

“ த ”

தடவி தம்முடைய பக்தியை வெளிப்படுத்திக்கொண்டார். கடையில் அலங்காரமாக இருக்கட்டும் என்று தான் முனையிலே முடிச்சோடு கூடிய ஒரு கயிற்றைத் தொங்கவிட்டிருந்தார். இப்போதெல்லாம் அதைப் பலமாகப் பிடித்துக்கொள்ளாவிட்டால் செட்டியாரால் எழுந்திருக்க முடிவது இல்லை.

இத்தனை மாற்றமும் செட்டியாரின் திறமையால் வந்தவையே. இருப்பதை இல்லை என்று சொல்லியும், இல்லாததை எங்காவது வாங்கிக் கொடுத்தும், இப்படியாகச் செய்த வியாபாரத்தில் விளைந்த மாறுதல் இவ்வளவும். அவருக்கு உதவியாக அவ்வப்போது சில பொருள்கள் ‘கட்டுப்பாடு’ ஆகும். முன்நாள் செட்டியார் கடையில் அது எத்தனை முட்டை இருந்தாலும் மறுநாள் இல்லாதுபோகும். அம்புறம், கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும், தக்க மரியாதையுடன்தான்!

கொஞ்ச நாட்களாகச் சர்க்கரை அப்படித்தான் விசேஷமான மரியாதை கௌரவங்களுடன் மாலை 6 மணிக்குமேல் வெளிவந்துகொண்டிருக்கிறது. மிகுந்த சிரமத்தின் பேரில், மிகவும் வேண்டியவர்கள் தான் அதையும் சாதிக்க முடிந்தது. இத்தனைக்கும் அந்த ஊரில் சர்க்கரைக்குக் ‘கார்டு’ கொடுத்திருந்தார்கள். ஆனல் ‘கார்டு’ சர்க்கரை போதாதவர்கள் என்ன செய்வார்கள்? செட்டியார் இருக்கப் பயம் ஏன்?

மந்தகதியில் தொடங்கிய வியாபாரம் படிப்படியாக உயர்ந்து மதிப்பான நிலைக்கு வந்துவிட்டது. “செட்டியாரிடம் ரொக்கம் ரொம்ப இருக்கும்” என்று பலர் பேசத் தலைப்பட்டனர். சிலர் ‘ஒருலட்சம்’ என்றுகூட எண்ணி வைத்தவர்களைப்போல் சொன்னுர்கள். ஆனல் உண்மை யாருக்கும் தெரியாது. ஏன் என்ருல் செட்டியார் தன் கையிருப்பைப் பாங்கியில் போடுவது இல்லை. கடையை விட்டுவிட்டுப் பாங்கிக்குப் போகவேண்டும், அங்கே கும்பலோடு நின்று பணம் போடவேண்டும், எடுக்கவேண்டும். போடும்போதும் எடுக்கும்போதும் நாலுபேர் பார்ப்பார்கள் ஒருவர் கண்மாதிரி ஒருவர் கண் இருக்காது ஏன் இந்தத்தொல்லைஎன்று எண்ணினுரோ என்னமொ நாளதுவரை செட்டியார் பாங்கிக்குப் போனது இல்லை. ஆகவே அவருடைய இருப்பு விஷயம் அவர் ஒருவர்க்கே தெரியும். மனைவிக்குத் தெரியுமோ என்னமோ, நமக்குத் தெரியாது. யாராவது கொஞ்சம் நெருங்கிப் பழகுகின்றவர்கள் “உங்களுக்கு என்ன செட்டியாரே நீங்கள் லட்சாதிபதி” என்ருல், காதுவரை விரியும்படி ஒரு புன்னகை செய்துவிட்டு “உங்களுக்கென்ன சொல்லாமல்·

எனக்கல்லவா உண்மை தெரியும்?" என்று சொல்வாரே ஒழிய வேறு எதுவும் பேசுவது இல்லை.

'சீனாக்காரன் வருகிறானாமே' 'அணுகுண்டு போடுவானோ?'-இந்த மாதிரிப் பேச்சுகளுக்குக்கூட செட்டியார் கலங்கமாட்டார். ஓய்வாக இருக்கும்போது, காலையில் வாங்கிப் பெட்டி இடுக்கில் செருகிய தினசரியையெடுத்துக்கண்ணோட்டம்விடும் போது எந்தச் செய்தியும் அவரை ஒன்றும் செய்துவிட முடியாது. 'லாரி ஏறி குழந்தை மரணம்' என்று படித்தால்கூட 'பாவம்' என்று சொல்ல மாட்டார், "தலையெழுத்து யாரை விடும்?" என்றுதான் சொல்வார். அப்படிப்பட்டவர் ஒருநாள் பத்திரிகையைப் படித்துக்கொண்டு வரும் போது "ஐயோ-இதென்ன அநியாயம்" என்று அலறினார். எதிரே நின்றிருந்த வீட்டு வேலைக்காரி அலமேலு கூட பதறிப்போய் 'என்னங்க என்ன சமாசாரம்?' என்று கேட்டாள். நிமிர்ந்து பார்த்த செட்டியார் "என்ன சங்கதி? எங்கே வந்தே? போ! அப்பாலே வா!" என்று விரட்டினார். அலமேலுவுக்கே அது அதிசயமாக இருந்தது. வீட்டிலே எஜமானி அம்மா ஏதாவது சங்கதி இருந்தால், வீட்டுக்குத் தேவையான சாமான்கள் முதலியவைபற்றி, அலமேலுவிடம்தான் சொல்லியனுப்புவார். கடையிலே கூட்டம் இல்லாத போது அவள் வந்து போவாள்; அவள் வருவதைச் செட்டியார் கொஞ்சம் ஆவலோடு எதிர்பார்த்தார் என்றுகூட சொல்லலாம். அவரும் மனிதர்தானே? அதிலும் அலமேலுவுக்குக் கொஞ்சம் அலங்காரத்திலே விருப்பம். அவளோடு பேசுவது வியாபாரத்திற்கும் கெடுதல் இல்லாத நேரம். பேச்சுக்குக்கூடவா பஞ்சம்! ஆனால் அந்த அலமேலுவையே செட்டியார் "அப்புறம் வா-போ-போ" என்று விரட்டிவிட்டாரே! ஏன்?

'ஏனோ?' என்று எண்ணியபடி அலமேலு போய்விட்டாள். செட்டியாருடைய பதறல் போகவில்லை. திரு திரு என்று விழித்தார். கீழும்மேலும் பார்த்தார் பித்துப் பிடித்தவர்போல் ஆனார். பத்திரிகையில் அப்படி என்னதான் வந்திருந்தது?

**கள்ளப்பணம் சிக்கியது**

"இவ்வூரில் பல வியாபாரிகளின் வீட்டை அதிகாரிகள் சோதனையிட்டபோது லட்சக் கணக்கான கணக்கில்வராத கள்ளப்பணம் கண்டுபிடிக்கப் பட்டது. சிலருடைய வீடுகளில் குளியல் அறையிலும், கழிவிடங்களிலும், படுக்கைகளிலும், பூஜை அறையிலும் கணக்குகளும், ரூபாயும் கண்டுபிடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டன. மேலும் பல ஊர்களில் சோதனை நடத்தப்படும் என்று தெரிகிறது.

என்ற செய்திதான் பெரிதாக வந்திருந்தது. இதைப் படித்துத்தான் செட்டியார் கலங்கிவிட்டார். அவர் பணத்தை-கணக்கே எழுதாத கணக்கில்லாத பணத்தை - எங்கே வைத்திருக்கிறார் என்பது அவருக்குத்தான் தெரியும். இதுவரை அதைக் கண்டவர்கள் யாரும் இல்லை. ஆனால் இதோ அதிகாரிகள் குளியல் அறை, கழிவிடம் படுக்கை எல்லாவற்றையும் அல்லவா குடைகிறார்கள். ஒருவேளை தன் செல்வம்-காலமெல்லாம் கஷ்டப்பட்டு காலணா காலணாவாக (காலணா காலத்திலிருந்து செட்டியாரிடம் இருப்பு வளர்கிறது) சேர்த்த பணத்தைக் கண்டுபிடித்து விட்டார்களானால்? ஏது இவ்வளவு தொகை? கணக்கு எங்கே? எவ்வளவு விற்பனை வரி கட்டுகிறீர்? வருமான வரி கட்டுவது உண்டா? இன்னும் என்னென்ன கேட்பார்களோ? கேட்டால் கேட்டு விட்டுப் போகிறார்கள் என்று விட்டு விட முடியாது. இந்தக் கேள்விகளுக்குச் செட்டியார் என்ன பதில் சொல்ல முடியும்? விற்பனை வரி, வருமான வரி என்பதுஎல்லாம் அவரைப் பொருத்தமட்டில் ஒரு பொருளும் இல்லாத சொற்களாக இருந்து வருகின்றனவே, என்ன சொல்வார்? சொல்வது கிடக்கட்டும். கண்டெடுக்கும் பணத்தை என்ன செய்கிறார்கள் என்பதை 'பேப்பர்காரன்' போடவில்லையே. ஒருவேளை அதைப் பறிமுதல் செய்துவிடுவார்களோ?

இன்ன திசைதான் என்று இல்லை, பலவாறு சென்றது செட்டியாரின் சிந்தனை. அன்று வியாபாரத்தில்கூட அதிகக் கவனம் செலுத்தவில்லை; செலுத்த முடியவில்லை. வீசை மூன்று ரூபாய்க்குச் சர்க்கரை கேட்டவர்களுக்குக்கூட 'இல்லை'என்றேசொல்லி விட்டார். வீடு பற்றி எரிகிறது- இப்போது போய் பிடிக்கு நெருப்பு கேட்கிறார்களே என்ற எரிச்சல் செட்டியாருக்கு.

கடையை மூடிக்கொண்டு வீட்டுக்குப் போன பிறகும் செட்டியாரின் மனம் அமைதி யடையவில்லை. சரியாகச் சாப்பிடவில்லை. என்ன காரணம் என்று மனைவியும் கேட்கவில்லை. கேட்டால்தான் செட்டியார் சொல்வாரா என்ன? அதோடு வேலைக்காரியிடம் சொல்லி யனுப்பிய சாமான்கள் வரவில்லையே என்ற ஏக்கம் வேறு அந்த அம்மாளுக்கு. இரவு முழுதும் செட்டியார் தூங்கவில்லை. எப்படித் தூங்க முடியும்? கணக்கு, பணம், சோதனை, கேள்வி, விசாரணை இதுவே அவருக்கு விசாரமாகஇருந்த போது எங்கிருந்து தூக்கம் வரும்?

மறுநாள் செட்டியார் கடையில் உட்கார்ந்திருந்தபோது நாலைந்து ஜீப்புகள் அவசரம் அவசரமாகப் பறந்து கொண்டிருநததைக் கண்டார். புதிய புதிய அதிகாரிகள் அந்த வண்டிகளிலே இருந்தனர். அவர்கள் யார் என்பதையாவது தெரிந்துகொள்ளலாம் என்றால் யாரைக் கேட்பது? கேட்டால் ஒருவேளை வீணாச் சந்தேகம் வருமோ என்னமோ? சும்மா இருக்கும் சங்கை ஏன் ஊதிக்கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் யாரையும் கேட்கவில்லை-தீர்மானமே செய்துவிட்டார். அவர்கள் சோதனை செய்ய வந்த அதிகாரிகள்தான் என்று. சுரத்தில்லாமல் கடையில் இயந்திரம் மாதிரி உட்கார்ந்து அளந்து நிறுத்துக்கொண்டிருந்தார்.

ஆனால் அவருடையமனமோ தீவிரமான எண்ணங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. எப்படியாவது தம் வசம் இருக்கும் பெருந்தொகையை அதிகாரிகள் கண்ணில் படாமல் மறைத்துவிடவேண்டும்என்று தீர்மானித்துவிட்டார். எங்கே ஒளிப்பது? அதுதான் தெரியவில்லை. கழிவிடம், மறைவிடம், படுக்கையறை, பூஜை அறை எதையும் விடுவது இல்லையாமே? எங்கே தான் ஒளித்து வைப்பது? சே! என்ன சங்கடம் இது!

தன்னை ஒரு புள்ளியாக மதித்து வந்து சோதனை போடுவார்களா

சின்ன கடைதானே என்று விட்டு விடுவார்கள் என்று ஒரு ஆசை.

ஆனுல், மறுகணமே அது மறைந்துவிடும். எப்படிச் சொல்ல முடியும்? தன்மீது பலருக்குப்பொருமை என்பதைச் செட்டியார் அறிவார். எவன் எந்த அதிகாரிக்கு மொட்டைக் கடிதம் எழுதுவானே? மொட்டைக் கடிதம் எழுதுவது என்ன, நேரே போய் சொல்லிவிட்டு வந்தால்தான் அவர் என்ன செய்ய முடியும்?

எப்படியும் கைவசம் உள்ள தொகையை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றிவிட வேண்டும். இந்தக் கண்டம் தாண்டினுல் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நிலமோ, வீடோ வாங்கிப் போட்டுவிட வேண்டியதுதான். என்ன விலே ஆனுலும் விடக்கூடாது என்று தீர்மானித்துவிட்டார்.

அதெல்லாம் சரி! ஆனுல் இப்போதைக்கு எங்கே அதை-சனியன் என்றுகூட வாய் தவறிச் சொல்லிவிட்டார்-ஒளிப்பது?

“சாமி” அலமேலுதான் குரல் கொடுத்தாள், நிமிர்ந்து பார்த்தார். நேற்றையதினம்போல் “போ!போ!” என்று விரட்டிவிடவில்லே. “என்ன?” என்று கேட்டார். கேட்கும்போதே அலமேலுவை நோட்டம் விட்டார். அவளுடைய அழகு கால் என்ருல் அலங்காரம் முக்கால். சாதாரண நாட்களாக இருந்தால், செட்டியார் பேச்சிலே வம்புக்கு இழுப்பார். “என்ன அலமேலு, இந்தப் புடவைக்கு என்ன பெயர்? இந்த ஜாக்கட்தான் இப்ப பாஷனு?” என்றுகூட கேட்பார். “போங்க சாமி, நீங்க ஒண்ணு” என்று அவள் சிணுங்குவாள். அலமேலுவுக்குத் திருமணம் ஆகி நான்கு குழந்தைகள் இருக்கின்றன. ஆனுல் அவளேப்பார்ப்பவர்கள் நிச்சயம் அப்படி நினேக்கமாட்டார்கள்.

செட்டியார் இப்போது அவளே ‘ரசிக்கும்’ நிலேயில் இல்லே. அதனுல் “என்ன?” என்று மட்டும் கேட்டு வைத்தார்.

அலமேலுவுக்கு எங்கிருந்தோ மிகுந்த வெட்கம் வந்துவிட்டது. ஒரு நெளி நெளிந்தாள். “சும்மா சொல்லு” என்ருர் செட்டியார்.

“ஒன்றும் இல்லேங்க. ஒரு புடவை எடுக்கவேணும். பத்து ரூபா கேக்கலாம்னு....” அலமேலு இழுத்தாள்.

செட்டியார் வரவு செலவில் இறுக்கம்தான் என்ருலும், அலமேலுவுக்கு ஐந்து பத்து அவ்வப்போது தருவார். அதை அலுமேலுவும் சரி. செட்டியாரும் சரி எஜமானி அம்மாளிடம் சொல்வது இல்லே. ஆனுல் ஒன்று இரண்டாகப் பாதியாவது திரும்ப வாங்கிவிடுவார். அந்தப் பழக்கத்தில்தான் அலமேலு பத்து ரூபா கேட்டாள்.

செட்டியார் சிந்தனேயில் இருந்ததினுல் உடனே பதில் சொல்லவில்லே. கொடுக்கத் தயங்குகின்ருரோ என்று எண்ணிய அலமேலு பணத்தின் அவசியத் தேவையை மீண்டும் சொல்லலானுள்.

“வேறே ஒண்ணும் இல்லீங்க. நாளக்கி நான் ஊருக்குப் போறேங்க அம்மாவுக்கு ஒரு புடவை எடுத்துக்கிட்டுப் போகலாம்னு நெனச்சிதாங்க..”

செட்டியாருடைய மனதில், எண்ணத்தில் மின்னல் பாய்ந்தது போலிருந்தது. ஏதோ தீர்மானத்திற்கு வந்தவர்போல் சிலிர்த்து உட்கார்ந்தார்.

“என்ன சொன்னே அலமேலு? நாளேக்ரு ஊருக்குப் போறயா? எந்த ஊர்?”

செட்டியார் ஏன் அவ்வளவு பரபரப்போடு கேட்கிருர் என்பது அலமேலுவுக்குப் புரியவில்லே. ஆனுலும் ரூபா வேண்டுமே! பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்?

“ஆமா சாமி நாளக்கிப் போறேன். மண்ணூர்தானுங்களே எங்க ஊர் அங்கதாங்க போறேன்.”

“அங்கே யார் இருக்கிறது!”

“அம்மா, அப்பா இருக்கிருங்க. நேத்தே கொளந்தைகளே இட்டுகினு அவரு போயிருக்காரு. நான் நாளேக்குப் போறேங்க..”

“சரி. ரொம்ப சந்தோஷம். ரூபா தர்ரேன் அதோடு ஒரு சின்ன டிரங்கு பெட்டியும் தர்ரேன், அதையும் எடுத்துக்கிட்டுப் போ. உடனே திரும்பிடாதே. பத்து நாள் அங்கயே இரு. பிறகு வா. டிரங்கு பெட்டி பத்திரம். பூட்டிதான் வச்சிருக்கேன். திறக்கக் கூடாது. உள்ளே சாமி படம் வைச்சிருக்கேன். ஒரு பத்து நாள் வெளியூர்லே வைக்கறேன்னு பிரார்த்தனே அதான் உன்னிடம் தருகிறேன். வேறே ஒண்ணும் இல்லே. பெட்டியை அனுவசியமாகத் தொடக்கூடாது. பூட்டிலே கையே படக்கூடாது. என்ன, வெச்சிருந்து கொண்டு வருவையா?” என்ருர் செட்டியார்.

அலமேலுவுக்குச் செட்டியார் என்ன சொல்லுகிருர் என்பதே புரியவில்லே. கேலி செய்ருரோ என்றுகூட நினேத்தாள். செட்டியார்மெல்ல மெல்ல அவ்ளிடம் சங்கதியை விளக்கிப் பத்து ரூபாயையும், பெட்டியையும் கொடுத்தனுப்பினுர்.

பெட்டியோடு அலமேலு சென்றதற்குப் பிறகு செட்டியாருக்குப்புதிய தெம்பு பிறந்தது. அப்பாடா, ஒரு வழியாக ஒரு பத்து நாளேக்கு அதை-இப்போது சனியன் என்று சொல்லவில்லே - அதிகாரிகள் - பாவிகள்-கண்ணில் படாமல் ஒளித்தாயிற்று- இனி, பயம் இல்லே. இந்த அதிகாரிகள் ஆட்டம் ஓய்ந்ததும், அப்பாவி அலமேலு பெட்டியைக் கொண்டுவந்து பயபக்தியோடு ஒப்படைக்கப் போகிருள். அப்புறம் என்ன கவலே!

செட்டியார் கெடுவுப்படி பத்து நாள் கழித்து அலமேலுவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தார். பத்து நாளுக்குமேல் பத்து நாள் ஆன பின்னரும் அவள் வரவில்லே. அந்தப் பத்து நாளில் இருபது முறை அலமேலுவின் குடிசைக்குப் போய் வந்துவிட்டார். காலேயும் மாலேயும் அவர் அங்கே தவருமல் வந்து அலமேலுவைப் பற்றி விசாரித்ததை வித்தியாசமாகக்கூட நினேத்துக் கொண்டார்கள். ஒருத்தர் செட்டியாரிடம் அந்தரங்கமாக அதைச் சொல்லியும் காட்டினுர். “என்ன செட்டியார்வாள், அவள் அப்படி அபூர்வமான வேலேக்காரி. அவள்போனுல் போகட்டுமே - வேறே சின்னவளாகக்கூட யாரையாவது பார்த்து ஏற்பாடு செய்து கொண்டால் போயிற்று.” என்ருர். அன்றிலிருந்து செட்டியார் அந்தக் குடிசைப் பக்கம் போவதையும் நிறுத்திக்கொண்டார்.

சரி. மண்ணூர்க்குப் போய்பார்த்துவிட்டு வருவது என்று தீர்மானித்து ஒரு நாள் அந்த ஊருக்கு சென்ருர்.

அலமேலு வீடு எது என்று கேட்டு விசாரித்துக்கொண்டு அவள் வீட்டிற்குப் போனார். வீடு பூட்டிக்கிடந்தது! எங்கே போயிருக்கிறார்கள் என்று விசாரித்தார். "எங்குபோனார்களோ யாருக்குத் தெரியும். இந்த வீட்டை விற்றுவிட்டு அவர்கள் போய் பதினைந்து நாளாயிற்றே" என்ற தகவல் தான் கிடைத்தது.

திகைத்தார் செட்டியார். எந்த இடம் சென்று அவர் அலமேலுவைத் தேடுவார்?

இப்போதெல்லாம் செட்டியார் கடையில் சர்க்கரை பகலில்தான் விற்கப்படுகிறது. யாராவது செட்டியாரைப் பார்த்து "உமக்கென்ன லட்சாதிபதி" என்றால் செட்டியார் புன்முறுவல் செய்வது இல்லை. "உனக்கென்னய்யா வீண் பேச்செல்லாம். எது வேண்டுமோ கேள். தருகிறேன். வாங்கிக்கொள், போய்வா" என்று பொரிந்து தள்ளுகின்றார்.

செட்டியார் மாறிவிட்டார் என்று ஊரிலே பேசிக்கொண்டார்களே தவிர அதற்கான காரணம் யாருக்கும் தெரியாது.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

பொல்லாத ஒருவனை நான்
நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானைப்
புலியேறு என்றேன்;
மல்லாரும் புயன் என்றேன்
சூம்பல் தோளை;
வழங்காத கையனை நான்
வள்ளல் என்றேன்;

இப்படியாகப் புலவர் பலபேரைப் புகழ்ந்து பாடினார். கல்லாதவனைக் கற்றவன் என்றார்; காடு திரிபவனை நாடாள்வான் என்றார்; பொல்லாதவனை நல்லவன் என்றார்; போர்க்களமே அறியாதவனை ஆண் புலி என்றார்; சூம்பிப்போன தோள் உடையவனை, ஆற்றல் மிக்க தோளோன் என்றார்; வழங்காதானை வள்ளல்என்றார். ஏன்? புகழ்ந்துபாடினால் பொருள் ஏதேனும் கிடைக்கும் என்றஆசைதான் அந்தஆசையால் தூண்டப்பட்டதால்தான் புலவர் இத்தனை பொய்யுரைகளையும் சொன்னார். ஆனால் கேட்டிருந்த சீமானோ "போய் வாரும் புலவரே" என்று கூறு வெறுங் கையோடு விடை கொடுத்து அனுப்பிவிட்டான். "சொல்லுக் கட்டும் புலவரைக் கண்டக்கால் தூறிப் பாய்ந்து கதவை யடைத்து எதிர் மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ?" என்று நொந்துகொள்ளலாம். முன் ஒரு முறை அப்படித்தான் நொந்து கொண்டார் இப்புலவர். ஆனால் அதனால் காணும் பயன் என்ன? தூற்றிவிட்டால் மனக் கசப்பு மாறி விடுமா என்ன? நொந்துபோன தன் மனத்துக்கு ஏதாவது ஆறுதல் சொல்லிக் கொள்ள வேண்டும் அல்லவா? தனக்குத் தானே ஆறுதல் தேடிக்கொள்கிறார் புலவர். எப்படி?

இல்லாது சொன்னேனுக்கு
இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால்
ஏகின்றேனே.

நான் இல்லாதது எல்லாம் சொன்னேன். கற்றாய், நாடாள்வாய், நல்லாய், புலியேறு, வள்ளல் — என்றெல்லாம் உயர்த்தி உயர்த்திப் பாடினேன். இல்லாததை யெல்லாம் சொன்னேன். இல்லாததைச் சொன்ன எனக்கு அவன் இல்லை என்று சொல்லிவிட்டான். இது என் குற்றம்தான். அதனை உணர்கின்றேன். அதனால் செல்லுகின்றேன் என்று உள்ளம் உடைந்து கூறுகின்றார் புலவர்.

புலவருக்குத்தான் கடவுள் பற்று உண்டே, கடவுளிடமே முறையிட்டுப் பார்ப்பதுதானே என்று யாராவது எண்ணலாம் அல்லவா? புலவர் கடவுளையும் விடவில்லை. அவரிடமும் தன் சோகக் கதையைக் கூறினார். ஆனால் கடவுளாலும் ஏதும் உதவி செய்ய முடியவில்லை. புலவர் தன் குறையைக் கடவுளிடம் சொன்னால் கடவுள் தம் குறையைப் புலவரிடம் கூறினாராம்! என் செய்வார் புலவர்?

"வஞ்சகர்பால் நடந்து அலைந்த
காலின் புண்ணும்
வாசல்தோறும் முட்டுண்ட
தலையின் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும்
நெஞ்சின் புண்ணும்
தீரும்" என்றே சங்கரன்
பால் சேர்ந்தேன்."

சிவபிரானிடமே சென்று, "இந்தப் புண்களைப் பாரும், என் குறை தீரும்" என்று கேட்டாராம். சிவன் இவரிடம் தன் புண்களைக் காட்டினானும்!

"அப்பா,
கொஞ்சமல்ல பிரம்படியின்
புண்ணும்! வேடன்
கொடுங்காலால் உதைத்த
புண்ணும்; கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால்
அடித்த புண்ணும்
பார்" என்றே காட்டிநின்றான்
பரமன் தானே—

என்கிறார் புலவர். எப்படியிருக்கிறது கதை? மனிதன் தன் குறையைச் சொன்னால், தேவன் அவன் குறையை மனிதனிடம் கூறுகின்றானும். ஆக வீட்டுக்கு வீடு வாயிற் படிதானும்!

தீராத கொடிய துன்பமாம் வறுமையில் கிடந்து வாடியபோதும் புலவருடைய நகைச்சுவை குறையக் காணோம். நையாண்டி செய்வதில் தம் ஈடுபாட்டைப் புலவர் வாய்க்கும் இடம் எல்லாம் காட்டிவிடுகின்றார்.

★

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.